நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for young friends of fmpb

FRIENDS MISSIONARY PRAYER BAND

# கேரீஸ்

இளைஞர் மாத இதழ்

## சபைக் களத்தில் சீஷத்துவம் காண்போம்!



களத்தில் 2026 வீரியம்

Vol 36-Issue 3 - March- 2026

Private circulation only



# கிறிஸ்துவின் அபிஷேகமும் – சிருஷ்டிப்பின் கிரியையும்



கிறிஸ்துவின் சிங்காசனம் நிரந்தரமானது என்பது மட்டுமல்ல, அவருடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ளது (எபி. 1:8). கிறிஸ்து நீதியை விரும்பினவர் மட்டுமல்ல, அக்கிரமத்தை அதாவது அநீதியை வெறுக்கிறவர் என பிதாவானவர் தன் குமாரனைச் சொல்கின்றார். நீதிக்கும், அக்கிரமத்துக்கும் உறவு இருக்க முடியாது. நாம் உண்மையிலேயே தேவனை நேசித்தால், நம்முடைய மனதில் பாவத்தைக் குறித்த வெறுப்பு தானாகவே உண்டாகிவிடும்.

### Throne of Christ is Eternal – நிரந்தரமானது:

தரிசனம் கண்ட தானியேல் சொல்கின்றார், சகல மனிதர்கள், பாஷைக்காரர்கள் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டுள்ளது. அவருடைய கர்த்தத்துவம் மற்றும் இராஜ்யம் ஒரு நாளும் அழியாது.

பிலேயாம் மூலம் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தில் “ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்” (எண். 24:17). அவர் ராஜாவாயிருந்து ஞானமாய் ராஜரீகம் பண்ணி, இந்த பூமியை நீதியாக நடத்துவார். கர்த்தர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறவர்.

### Christ Loves Righteousness - கிறிஸ்து நீதியை விரும்புகிறவர்:

கிறிஸ்து இந்த உலகத்திலிருந்த நாட்களில் அக்கிரமத்தை எந்த அளவு வெறுத்தார் என்றால், என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்த முடியும் என உலகத்தைப் பார்த்து சவால் விட்டார். நாம் உண்மையிலேயே தேவனை நேசிக்க ஆரம்பிப்போமானால் நம் மனதில் பாவத்தைக் குறித்து வெறுப்பு தானாகவே வந்துவிடும். ஆமோஸ் இஸ்ரவேலருக்குக் கொடுக்கும் ஆலோசனை என்னவென்றால், நீங்கள் இந்த உலகில் பிழைக்க வேண்டும் என்றால் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள் என்றார். “நீதியின்மேல் பசி தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்” என்றும் “முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்,” என்ற வார்த்தையின் மூலம் நீதியைக் குமாரன் எந்த அளவு விரும்பினார் என்பதை நமக்குக் கூறுகிறார்.

### The anointing of Christ - கிறிஸ்துவின் அபிஷேகம்:

மத்தியஸ்தராக இயேசு கிறிஸ்து இந்த பூமியிலிருந்த நாட்களில், பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் தோழரைப் பார்க்கிலும் கூடுதலாக ஆனந்த தைலத்தினால் அவரை அபிஷேகம் பண்ணினார் எனப் பார்க்கின்றோம். தோழர்கள் யார் என்றால், அவரோடு ஊழியம் செய்த அப்போஸ்தலர்கள், சீஷர்கள் மற்றும் பழைய ஏற்பாட்டு ஊழியர்களான தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்கள் அனைவரும் அவரின் தோழர்கள். இவர்களைப் பார்க்கிலும் கூடுதலாக ஆண்டவர் அபிஷேகம் பண்ணி பயன்படுத்தினார். உங்களுக்கும் அதே அபிஷேகத்தைக் கொடுத்து நீதிமான்களாக மாற்றி பயன்படுத்துவார்.

தேவனுடைய ஊழியத்தை எந்த ஒரு மனிதனும் தன் பெலத்தினால் செய்ய முடியாது. செய்யவும் கூடாது. மாம்சரீதியாக ஊழியங்களைத் தேவன் அங்கீகரிக்கமாட்டார். தன் ஊழியத்தைச் செய்ய தேவன் தரும் பெலனே அபிஷேகம் (யாத். 30:30).

புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய நாம் பெற்றுக்கொண்ட மிகப்பெரிய ஆசீர்வாதம் என்னவென்றால், நம்முடைய அபிஷேகமே. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டிராத ஒருவன் தன்னை கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ள முடியாது.

### He Created Everything - சகலத்தையும் உண்டாக்கினவர்:

கிறிஸ்து தேவனால் அபிஷேகிக்கப்பட்டார் என்று அறிவித்த பவுல், அவர் சிருஷ்டித்த கர்த்தர் என சொல்கின்றார். இவரைக் கொண்டே உலகத்தை உண்டாக்கினார். சகலமும் அவரைக் கொண்டு அவருக்காக சிருஷ்டிக்கப்பட்டது (கொலோ. 1:16). கர்த்தரின் வார்த்தையினால் வானங்களும், அவரின் வாயின் சுவாசத்தினால் சர்வ சேனைகளும் உண்டாக்கப்பட்டது. அவர் பூமியைப் படைத்து, அந்த பூமியில் மனுஷனைச் சிருஷ்டித்தார். வானங்கள் அவரின் கிரியைகளாக இருக்கிறது.

அன்பு வாலிபனே கிறிஸ்துவின் அபிஷேகம் மற்றும் சிருஷ்டிப்பின் கிரியையின் மேன்மையை அறிந்துக் கொண்டோம். இவை அனைத்தும் எவ்வளவு ஆச்சரியமானது.

கிறிஸ்துவின் சிங்காசனம் என்றுமுள்ளது. அவரைத் துதியுங்கள்!
கிறிஸ்துவின் இராஜ்ய செங்கோல் நீதியுள்ளது. அவரைத் துதியுங்கள்!
அக்கிரமத்தை வெறுக்கிறவரைத் துதியுங்கள்!
தைலத்தினால் அபிஷேகம் பண்ணினவரைத் துதியுங்கள்!
சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரைத் துதியுங்கள்!
எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரைத் துதியுங்கள்!

**சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்து நம்மை ஆளுகைச் செய்து, எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப்போட்டு, நம்மை அபிஷேகித்து சுவிசேஷம் சொல்ல பயன்படுத்துவாராக! ஆமென்.**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## VISION

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

| | |
|---|---|
| இளம் வாலிபர்களின் அறிவியல் களம் – Protractor | - 5 |
| இளமையில் சபை களம் கண்ட பரிசுத்தவான் | - 6 & 7 |
| அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்! | - 9 |
| இருமுனை மனநிலை நோய் | - 12 |
| AI Psychosis | - 14 |
| உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா? | - 15 |
| உண்மை அன்பு மாயமற்றது | - 20 |
| கனம் பொருந்திய ஸ்திரீ..! | - 22 |

# சபைக் களத்தில் சீஷத்துவம் காண்போம்

என் பின்னே வாருங்கள் என அழைக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

ஆஸ்திரேலியாவின் செழிப்பில் வளர்ந்த கிளாடிஸ், தன் எதிர்காலத்தைக் குறித்து திட்டமாக முடிவெடுக்க கர்த்தர் பல வசனங்கள் மற்றும் அவளது பணியின் மூலமாக உறுதிப்படுத்தினார். கர்த்தரின் விருப்பத்தைப் புரிந்துக்கொண்ட கிளாடிஸ், ஓய்வு நாள் பள்ளி ஆசிரியையாகவும், வாலிப ஊழியங்களில் பகுதி நேரமாகவும் பணிச் செய்தாள். இவ்வாறு எதைச் செய்தாலும் இதைக் கர்த்தருக்காக செய்கிறேன் என்ற உணர்வுடன் செயல்பட்டாள். இதுதான் கிளாடிஸ் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவிலுள்ள ஒடிசா மாநிலத்திற்கு வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

வரி வசூலிக்கும் பணியைக் கவனமாகச் செய்துகொண்டிருந்த மத்தேயுவைப் பார்த்து இயேசு: **"எனக்கு பின் சென்று வா"** (மத். 9:9) என்று கூப்பிட்டார். இயேசுவின் இந்த முதல் அழைப்பு அவரைப் பின்தொடரவும், அவரோடிருந்து அவரை அறிந்துக் கொள்வதுமேயாகும். இப்படிப்பட்ட உறவை அவரோடு கொள்வதற்கு தான் சீஷனாக அழைக்கிறார். சீடத்துவம் என்பது அவருக்கு பின் செல்வதேயாகும்.

**"சீடர்கள் தன்னலமின்றி நடக்கவே கிறிஸ்துவின் பாடசாலையில் முதலாவது கற்றுக்கொள்ள வேண்டும்"** என வேத அறிஞர் மேத்யூ ஹென்றி கூறுகிறார். சுயத்திற்குச் செத்துக்கொண்டே இருப்பதுதான் ஒரு சீடனின் அனுதின கடமையாகும். அதுதான் இயேசு காட்டிய மாதிரி. இவ்வாறு சிலுவைக்கு **"ஆம்"** என்று கூறி சுயத்திற்கு **"இல்லை"** என்பதுதான் சீடத்துவம். சிலுவைக்கு **"ஆம்"** என்பது, சுயத்திற்கு **"இல்லை"** என்பதைவிடக் கடினம். இரண்டையும் செய்தால்தான் கிறிஸ்துவுக்கு உண்மையான சீடனாய் இருக்க முடியும். கிளாடிஸ் கிரகாம் ஸ்டெயின்ஸ் சுயத்திற்கு **"இல்லை"** என்று சொல்வதில் உறுதியாகிவிட்டார்கள். இதை வாசிக்கும் வாலிபர்களே! நீங்கள் எப்போதும் இயேசுவைப் பின்பற்றும் சீஷனாயிருங்கள்.

பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி நடைபெற்ற மிஷனெரி நேர்முகத் தேர்வில் 12 பேர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். தொடர்ந்து உங்களுடைய ஜெபங்களில் இவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு சித்தமானால் மார்ச் 7, 8 ஆகிய தேதிகளில் இறைவனின் தோட்டம் பூண்டியில் நடைபெறவிருக்கும் LEAD TRAININGஇல் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்ய உங்களுக்கு வாஞ்சையிருக்குமாயின், இக்கூடுகையில் கலந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேவக் கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*



# பிரதிஷ்டை பண்ணப்பட்ட கொலைவாள் லேவி

REV. DANIEL GNANAPRAGASAM



பிரதிஷ்டை என்பது ஒரு நபர், இடம் அல்லது பொருட்களைப் பிரித்தெடுத்து, அவைகளைப் பரிசுத்த நோக்கத்திற்காக பயன்படுத்தும் செயலாகும். பிரித்து வைப்பது (Setting apart) மற்றும் பரிசுத்தமானவற்றுடன் தொடர்புக் கொள்வது (Association with the Sacred) என்பதாகும்.

கடந்த இதழில் சிமியோனின் வாழ்வைக் கொடுமையின் கருவியாகத் தியானித்தோம். “சிமியோனும், லேவியும் ஏகசகோதரர்; அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள்” (ஆதி. 49:5). லேவியின் வாழ்விலும் சிமியோனைப் போன்று உணர்ச்சி வசப்படுதல், கோபங்கொள்ளுதல், வன்முறையைக் கையாளுதல் போன்ற அடையாளங்களே காணப்பட்டது. சமாதானம் என்ற வார்த்தையைப் பிரதிபலிக்கும் சாலேம் எனப்பட்ட சீகேம் பட்டணத்தின் ஆண்மக்கள் யாவரையும் இருவரின் பட்டயங்களும் கொன்று போட்டதினால் அவர்களின் பட்டயங்கள் கொலைவாள்களாகக் கருதப்பட்டது (ஆதி. 34:25). சிமியோனின் வாழ்வு கோபத்தின் விளைவினால் உண்டாகும் ஆசீர்வாத இழப்பை உறுதி செய்தது. ஆனால் லேவியின் வாழ்வு பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட ஊழியத்தை உறுதி செய்தது. பிரித்தெடுக்கப்பட்ட அவனுடைய வாழ்வில் “தகப்பனின் ஆசீர்வாதமும், தலைவனின் தரிசனமும்” எவ்வாறு நிறைவேறியது என்பதை இக்கட்டுரையில் தியானிப்போம்.

## தகப்பனின் ஆசீர்வாதமும், தீர்ப்பும்:

தகப்பன் யாக்கோபு இவர்கள் இருவருக்கும் மற்றப் பிள்ளைகளைப்போல தனித்தனியே அல்ல, சேர்த்தே தன் தீர்ப்பை வழங்குவதை ஆதி. 49:5-7இல் பார்க்கிறோம். உக்கிரமான அவர்கள் கோபமும், கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்பட்டது மாத்திரமல்ல, யாக்கோபிலே அவர்கள் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்கள் சிதறவும் பண்ணப்படுவார்கள் என்ற சாபத்தீர்ப்பை ஆசீர்வாதத்திற்குப் பதிலாக பெற்றுக்கொண்டார்கள். எனவே தகப்பனின் தீர்ப்பு இருவரின் வாழ்விலும் ஒன்றாகவே அல்லவா நிறைவேறியிருக்க வேண்டும்? லேவியின் வாழ்வு சிமியோனின் வாழ்வைப் போல முடிந்து போகாமல், பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட வாழ்வாக அல்லவா மாறிப்போனது. லேவி பிரித்தெடுக்கப்பட்டது எப்படி? அவனுடைய கொலைவாள் பிரதிஷ்டைப் பண்ணப்பட்டது எப்படி?

## லேவியின் மனநிலையும், சுபாவமும்:


மனிதக் குலத்தின் எந்தவொரு சிறிய தவறுக்கும் கடவுளின் மிகப்பெரிய மன்னிப்பு உண்டு. ஏனென்றால், “அவர் மன்னிக்கிறதுக்குத் தயை பெருத்த தேவன்” (ஏசாயா 55:7). நாம் நம்முடைய தவறுகளிலிருந்து குணப்படுவதற்கும், மீட்பைப் பெறுவதற்கும் தருணங்களைத் தருகிறவராயிருக்கிறார். பழைய பாவ நிலையில் வாழ்வதற்கல்ல, பரிசுத்த வாழ்வு வாழ்வதற்காகவே. If God gives another chance; don’t repeat the same mistake.

வாய்ப்புகளை வழங்குவதும், மன்னிப்பு அருளுவதும் கடவுளின் சிறப்பான குணாதிசயமாகும். சிமியோன் மற்றும் லேவியின் வன்முறை கொலைவாள்களுக்கு முன்பாக கடவுளின் நியாயத்தீர்ப்பிற்கான வன்முறை மறுவாய்ப்பாக வழங்கப்படுவதை யாத். 32:15-29இல் காண்கிறோம். கர்த்தருடைய சாட்சி பலகைகளைப் பெற்றுக்கொள்ளும்படியாக மோசே, சீனாய் மலையில் கர்த்தருடைய சமுகத்திற்கு சென்றபோது, இஸ்ரவேல் ஜனங்கள் ஆரோனிடம் சென்று “எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டு பண்ணும். எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்றார்கள். அதனால் ஆரோன் விக்கிரக வழிபாட்டை (பொன் கன்றுக்குட்டி) உண்டு பண்ணி, நிர்வாண ஆராதனைக்குள்ளாக ஜனங்களை வழிநடத்தினான். இச்சம்பவத்தை அறிந்த மோசே கோபங்கொண்டு, பாளையத்தின் நடுவிலே நின்று “கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக் கடவர்கள்” (யாத். 32:26) என்று அழைப்புக் கொடுத்தான். இந்த அழைப்புக்கு முன்னதாக, கர்த்தரின் ஆசீர்வாதத்தை அளிக்கத்தக்கதான சிறப்பான அங்கீகாரமான “கர்த்தருக்கு பரிசுத்தம்” என்ற பிரித்தெடுத்தலை வலியுறுத்தியது. இது விக்கிரக ஆராதனைக்குட்பட்ட குடும்பத்தினரை விட, பரிசுத்த கடவுளுக்கு முன்னுரிமை அளிக்கும் விசுவாச மனந்திரும்புதலுக்கு அடையாளமான அழைப்பு. தங்களுக்கு முன் வைக்கப்பட்ட கடவுளின் ஆசீர்வாதமான பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட வாழ்வை ஏற்றுக்கொள்ள விரும்பாத மற்ற சகோதரர்கள் (சிமியோன் உட்பட) மத்தியில், லேவியின் புத்திரர் தங்கள் வைராக்கியத்தைக் கடவுளின் பரிசுத்தத்திற்காக வெளிப்படுத்தி, தங்கள் பட்டயத்தால் தான் ஏறக்குறைய 3000 பேரை வெட்டிப்போட்டார்கள்.

“எந்த ஆயுதமும் நல்ல ஆயுதமே; அதை நீங்கள் மரியாதையுடனும், திறமையுடனும் பயன்படுத்த முடிந்தால்” என்கிறார் பிரையன் ஜாக்ஸ்.

லேவி என்பதற்கு “பற்றுதல்” என்று பொருள். “லேயாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்று; என் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்றபடியால் அவர் இப்பொழுது என்னோடே சேர்ந்திருப்பார் என்று சொல்லி, அவனுக்கு லேவி என்று பேரிட்டாள்” (ஆதி. 29:34). தகப்பனின் கோபத்திற்கு உள்ளாக்கிய கொலைவாளைக் கர்த்தரைப் பற்றும் வைராக்கியத்திற்காக பயன்படுத்தியதால், லேவி ஆசாரிய ஊழியத்திற்கும், லேவியின் பட்டயம் பாவநிவிர்த்தி பலிகளைச் செலுத்தும் கருவியாகவும் மாற்றம் பெற்றது.

–இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# PROTRACTOR

இளம் வாலிபர் பகுதி - MRS. JOYLINE JEROME

My dear teen Boys and Girls. Happy March month Greetings to you and your family.

இந்த month நமக்கு சொல்லும் செய்தி, "Less of Me & More of Him" (Jesus the Christ), இன்னும் அதிகமாக Jesusஇன் அன்பைத் தெரிஞ்சிக்கவும், ஒரு Discipline Christian life styleல வாழவும் கர்த்தர் நமக்கு help பண்ணுவார். Exam tension எல்லாவற்றையும் கொஞ்ச நேரம் தள்ளி வச்சிட்டு, அடுத்த 15 நிமிடத்திற்கு Undivided Attentionனோட ஒரு சில விஷயங்களைக் கத்துக்கலாமா? இந்த Teen pageயோட Plan நீங்க அடிக்கடி use பண்ணுற Geometry Boxல இருக்கிற things தான். Jan. & Feb. monthல Compass & Dividerஅ பத்தி படிச்சோம். இந்த month நாம படிக்க போறது Protractor.

Geometry Boxல Compassக்கு அடுத்தபடியா நாம ரொம்ப use பண்ணுற things Protractorதான். இது mainஆ Anglesச Measure பண்ணுறதுக்கு usefulஆ இருக்கும். எந்த ஒரு Trigonometrical Construction வரையனும்னாலும் Protractor நமக்கு கண்டிப்பா தேவை. நிறைய scientific advancements வந்தாலும், இதோட applicationனை replace பண்ணுறதுக்கு இன்னும் எதுவும் வரல. Navigation, architecture மற்றும் Engineeringன்னு எல்லா Fieldக்கும் ஏத்த மாதிரி Protractor வேற வேற Typeல இருக்கு.

நம்ம Schoolல use பண்ணுற Protractorல 180 degrees clockwiseல இருப்பதுபோல, 180 degrees anticlockwiseலேயும் இருக்கும். Navigation and other directional applicationல full side Protractor அதாவது 360 degree clockwiseல இருக்கும். Engineering applicationல complex anglesச measure பண்ணுறதுக்கு Bevel Protractor use ஆகுது. இப்படி வேற வேற typeல இருந்தாலும், அதோட fundamental நாம இப்ப schoolல use பண்ணுற Protractor தான். இத use பண்ணுறதும் ரொம்ப simple. Protractorரோட baseல ஒரு straight line இருக்கும். இந்த line baseஅ வச்சிதான் all anglesசையும் mark பண்ணியிருப்பாங்க. Protractorல இருக்கிற base lineனையும், நம்ம வரையப்போற lineனையும் correctஆ place பண்ணி angle mark பண்ணிட்டு lineஅ வரைஞ்சிற வேண்டியதுதான். இது Simpleஆ இருந்தாலும் angle mark பண்ணுறதுல ஒரே ஒரு degree தள்ளி mark பண்ணினாலோ அல்லது Protractorரோட baselineல slightயா move பண்ணினாலும், நம்ம Construct பண்ணுற Structure baselineல meet ஆகாது.

Okay இப்ப Bible application time, Geometrical Protractor ஒரு Preventative Standard Measurement Device. (Preventative - Fix it before it is Broken). எப்படினா, ஒரு multi-storey structure கட்டும்போது Groundல இருந்து one degree slight mistake ஆச்சினா, finalஅ அந்த structureரே collapse ஆகிடும். அப்படி இல்லைனா நம்ம plan பண்ணின designக்கு சம்மந்தமே இல்லாத ஒரு structureல இருக்கும். இப்ப, ஒருவேளை groundல இருந்து correctஅ அந்த angleலை measure பண்ணி structureஅ கட்டுறதுக்கு start பண்ணினா, நம்ம எதிர்பார்த்த correctஆன designல அந்த structure இருக்கும். Bibleலும் ஒரு Preventative Standard Measurement Device தான். இத சங்கீதங்களில் எப்படி சொல்றாங்கன்னு கேளுங்க.

"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்." (சங்கீதம் 119:11)

பாவத்திலிருக்கிறவங்க, அதிலிருந்து வெளியே வர்றதுக்கு மட்டும் Bible helpfulஅ இல்லாம, Sinக்குள்ளே போகாமலிருக்கவும் Bible usefulஅ இருக்குது. இன்னும் ஒரு முக்கியமான lessonன இந்த Protractor நமக்கு கற்றுத்தருது. அது என்னன்னா, lifeல நாம செய்கிற சின்ன சின்ன compromise நம்மள பெரிய failure குள்ள தள்ளிவிடும்.

சின்ன சின்ன Non-Christian life styleல உன்னுடைய friends introduce பண்ணும்போது, நீங்க கவனிக்காம அத neglect பண்ணலைனா, நாட்கள் போக போக உங்களுக்கும் Bibleலுக்கும் உள்ள Distance ரொம்ப அதிகமாகிடும். இதைப் பத்தி Wise King Solomon சொல்லுறத கவனியுங்க. "திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள்; நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே." (உன். 2:15)

திராட்சைத் தோட்டம் - நம்முடைய வாலிப நாட்கள்
குழிநரி, சிறுநரி - சின்ன சின்ன Compromise

So Teens Carefulஅ இருங்க. இத வாசிக்கும் போது, கர்த்தர் உங்களுக்கு எதையாவது ஞாபகப்படுத்துவாரானால், அதை உடனே விட்டுவிடுங்கள். அந்த சின்ன compromise உங்கள பெரிய sinக்கு நேரா வழிநடத்திவிடும். sinனை விட்டு விடுவதற்கு கர்த்தர் உங்களுக்கு உதவி பண்ணுவாரு. முழங்கால் போட்டு prayer பண்ணுங்க.

Until then, see you next month.

## இளமையில் சபை களம் கண்ட பரிசுத்தவான்

# ராபர்ட் மர்ரே மச்செயின்



### "எல்லா நிலைகளிலும் என்னை இயேசுவைப்போல் மாற்றும்"

''பகற்காலம் முழுவதும் என் இயேசுவுக்காக தேவப்பணிச் செய்துவிட்டு இரவில் அந்த அன்பரின் புன்னகைகளின் மத்தியில் படுத்து இளைப்பாறுவது எத்தனை ஆனந்தம்'' போன்ற கனிமொழிகளை உதிர்த்தவரான ராபர்ட் மர்ரே மச்செயின் என்ற பரிசுத்த குருவானவர் ஸ்காட்லாந்து தேசத்தில் எடின்பரோ என்ற இடத்தில் 1813ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள் பிறந்தார். ராபர்ட் மர்ரே சிறுவனாக இருந்தபோதே மிக இனிமையாகவும், பந்த பாசத்தோடும் யாவரிடமும் பழகும் குணம் கொண்டவர். 1827ஆம் ஆண்டு எடின்பரோ சர்வ கலாச்சாலையில் படிக்கும்போது சிறப்பானக் கல்விக்காக பல பரிசுகளைப் பெற்றார். இசையிலும் அவருக்கு சிறந்த ஞானமிருந்தது. பாடல்களைத் தனது இனியக் குரலால் பாடும் வரம் பெற்றிருந்தார். எல்லா சிறந்த தாலந்துகளை உடையவராயிருந்தபோதும் எபேசியர் 2:12இன்படி, ''தேவனற்றவராகவும், கிறிஸ்துவை சேராதவராகவும், இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவராகவுமே அவர் வாழ்ந்து வந்தார்.''

### மன மாற்றம்:

மர்ரே மச்செயினின் மூத்த சகோதரர் டேவிட், சுமார் 8 வருடங்கள் இவரைவிட மூத்தவராவார். இவர் சில காலம் வியாதிப்பட்டு இறுதியில் இரட்சிப்பின் நிச்சயத்தோடு மரித்தார். இவரது மரணம் மர்ரே மச்செயினை வெகுவாக பாதித்தது. அதற்கு பின்வந்த நாட்களில்தான் தேவனைத் தேடவும், அவரது வசனங்களைக் கருத்தோடு வாசிக்கவும் ஆரம்பித்தார். துவக்கக் காலத்தில் தவறி பாவ வாழ்க்கையில் அடிக்கடி விழுந்து விடுவார். ஆனால் தனது நண்பனுக்கு ஒரு முறை எழுதிய கடிதத்தில் இப்படியாகக் குறிப்பிடுகிறார், பதினொறு ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் என் சகோதரனை இழந்தேன். ஆனால் என்றென்றைக்கும் என்னோடிருக்கும் இயேசுவைப் பற்றிக்கொண்டேன் என்று எழுதுகிறார். இந்த மனந்திரும்புதலுக்கு பின் 1831ஆம் ஆண்டு வேத சாஸ்திரக் கல்லூரியில் இறையியல் பயின்றார். தனது முதல் குருத்துவப் பணியை 1836ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள டண்டி பட்டணத்தில் பரிசுத்த பேதுரு தேவாலயத்தில் துவங்கினார் (படம் இணைக்கப்பட்டுள்ளது). அப்போது இவருக்கு 23 வயது. தனது முதல் பிரசங்கத்தின் வசனம் ''கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்'' ஏசாயா 61:1. இவருடைய முதல் பிரசங்கத்திற்கு ஏற்பத் தொடர்ந்து ஊழியம் செய்த 7 வருடங்களும், அந்த திருச்சபையிலே ஒரு மாபெரும் உயிர் மீட்சியை ஏற்படுத்திவிட்டார். இவர் ஒவ்வொரு வாரமும் வாலிபர்களுக்கு ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தி, வாலிபர்கள் மத்தியில் பெரும் உயிர் மீட்சியை உண்டாக்கினார்.

### சதா தேவனோடு...

அதிகாலை கண் விழித்தவுடன் ஒரு சங்கீதத்தை வாசித்து தேவனைத் துதிப்பார். பல மணி நேரம் ஜெபத்திலும், வேத தியானத்திலும் செலவிடுவார். இது குறைந்தது 4 மணி நேரமாகும். அதுவரை யாரையும் பார்க்கவோ, பேசவோ மாட்டார். ஜெப நேரத்தை முடித்து காலை உணவுக்காக அவர் வரும்போது அவரது முகம் பிரகாசிப்பதைப் பலரும் பார்த்திருக்கின்றனர். இவர் ஞாயிற்றுக்கிழமை தன் திருச்சபையில் பிரசங்கிக்க, ஆறு நாட்களும் முழங்காலில் நின்று பிரசங்கம் ஆயத்தம் பண்ணுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவருக்கும், அவர் பிரசங்கத்தைக் கேட்கும் சபை மக்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை உண்மையிலேயே ஒரு மனமகிழ்ச்சியின் நாள் தான்.

### பாலஸ்தீன சுவிசேஷக் களம்:

1839ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து திருச்சபை மர்ரே மச்செயினையும், அவரோடு கூட 3 குருவானவர்களையும், பாலஸ்தீன நாட்டில் புதிதாக வந்து குடியேறிய யூத மக்களுக்கு, தேவனுடைய சுவிசேஷ நற்செய்தியை அறிவிக்கும்படியாக அனுப்பி வைத்தது. இந்த மூன்று குருவானவர்களில் ஆண்ட்ரூ போனரும் ஒருவர். இவர் மர்ரே மச்செயினின் நெருங்கிய ஆவிக்குரிய தோழன் ஆவார். நான்கு பேரும் இயேசுவே மெய்யான மேசியா என்று யூதர்களுக்குப் பறைசாற்றினர். இந்த களத்தின் இரு அனுபவங்களை மர்ரே மச்செயின் சொல்லக் கேட்போம்.

''எகிப்து தேசத்தில் சோவான் என்ற இடத்தில் எங்கள் கூடாரத்தைப் போட்டோம். இது யோசேப்பு இஸ்மவேலர்களிடம் அடிமையாக விற்கப்பட்ட இடம். பார்வோனுக்கு முன்பாக மோசே அதிசயங்கள் செய்த இடம். எங்களின் வனாந்திரப் பயணத்தின் ஆபத்தைக் காட்டிலும், பெரும் ஆபத்து சோவானில் குடியிருக்கிற சுதேசிகளிடம் மிகுந்திருந்தது.''

MR. ISAAC KAMALESH

ஆறு மாத ஊழியக் காலத்தில் 10 நாட்கள் எருசலேமில் செலவிட்டோம். எருசலேம் பட்டணத்தை இரட்சகர் பார்த்து ''உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கேற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் உனக்கு நலமாயிருக்கும்'' என்று சொன்ன இடமாகிய கூட்டு ரஸ்தாக்களின் சந்திப்பிலிருந்து ''எருசலேமைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுதோம்'' என்று எழுதிவைத்திருக்கிறார்.

**பரிசுத்தம்:**

தேவன், ராபர்ட் மர்ரேயை ஸ்காட்லாந்து தேசத்தில் அநேக ஆயிரங்களுக்கு பரலோக ஆசீர்வாதமாக எடுத்து பயன்படுத்தியதின் ஒரே ரகசியம், அவரது ஒப்பற்ற பரிசுத்த வாழ்க்கை தான். தனது 30 வயது பூர்த்தியாவதற்கு முன்னரே, தேவனுடைய இராஜ்யத்திற்கு சென்றவர். தன்னை வெகு பரிசுத்தமாகக் காத்துக்கொண்டார். வாலிபனான அவருக்கு வாலிபத்தின் சிற்றின்பப் பாவங்கள் கடல் அலைகள் போல திரும்பத் திரும்ப வந்து மோதி அடித்தாலும், தன்னைப் பரிசுத்த நிலையில் உறுதியாக வைத்துக் கொண்டார். தன்னைப் பரிசுத்தமாக காத்துக்கொள்ள அவரின் ஒழுக்கமுள்ள நடத்தைகள்தான் சாட்சி. ஒருமுறை அவரோடு பள்ளியில் பயிலும் மாணவனுக்கு அவர் எழுதிய கடிதத்திலிருந்து நாம் அறியலாம். ''வேதத்தை நீ தினமும் வாசி, அதைப் புரிந்துக்கொள். தினமும் ஒரு அதிகாரம் ஆகமங்களிலிருந்தும், ஒரு சங்கீதம், சுவிசேஷ புத்தகத்திலிருந்து ஓர் அதிகாரம், நீருபத்திலிருந்து ஓர் பகுதி என தினமும் வாசித்துப் பழகு. வேதத்தை வாசிக்கும் போதே, அதை துதி மற்றும் ஸ்தோத்திர ஜெபமாக மாற்ற கற்றுக்கொள் என்று எழுதுகிறார். தொடர்ந்து சொல்லும் போது, தினசரி செய்திதாள்கள், பத்திரிக்கைகள் மற்றும் உலகப் பொது புத்தகங்களை ஒரு கெமிஸ்ட் ஆய்வகத்தில் அதிக விஷ வீரியம் கொண்ட பாட்டிலைப் பயன்படுத்துவது போல் கவனமாகப் பயன்படுத்து என்று அறிவுரை கூறியதிலிருந்து அறிந்துக் கொள்ளலாம்.





**இறுதி நாட்கள்:**

மர்ரே மச்செயின் வெகு துரிதமாக, தனது வாலிப வயதிலேயே தனது ஓட்டத்தை முடித்துக் கொண்டார். தனது மரணத்தைக் குறித்து அவருக்கு முன்னதாகவே நன்கு தெரிந்திருந்தது. இங்கிலாந்தின் வடபகுதிக்கு ஊழியத்திற்குச் சென்று திரும்பி வந்து காய்ச்சலால் அவதிப்பட்டார். தனது உடன் பணியாளர்களுக்கும், தனக்கு உதவி செய்பவர்களையும் பார்த்து கடைசியாக சொன்னது ''ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிறபிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.'' 1 கொரி. 15:58 என்பது தான். இவர் தனது கைகளை வானத்திற்கு நேராக உயர்த்தி, பின் தாழ்த்தி, படுக்கையில் வைத்தார். எவ்வித முணுமுணுப்போ, வேதனைக் குரலோ, பெருமூச்சின் தொனியோ எதுவும் அவருடைய வாயிலிருந்து புறப்படவில்லை. உதடுகள் மட்டும் அசைந்துக் கொண்டே (ஜெபித்துக் கொண்டே) இருக்க, அவரது ஜீவன் 1843 மார்ச் 25 அன்று காலை அருமையாகப் பிரிந்தது. இந்தச் செய்தி காட்டுத் தீ போல் ஸ்காட்லாந்து முழுமைக்கும் வேகமாக பரவத் தொடங்கிற்று. அன்று ஜனங்கள் தங்கள் வர்த்தகத்தை நிறுத்தினர், கடைகள் மூடப்பட்டது, ஊரெங்கும் ஓர் அமைதி நிலவியது. 7000 ஜனங்கள் கூடி வந்து பரிசுத்த பேதுரு ஆலயக் கல்லறைத் தோட்டத்தில் அவரை அடக்கம் செய்தனர்.

**எவ்வளவு காலம் ஊழியம் செய்தாய் என்பதை விட, எப்படிப்பட்ட ஊழியம் செய்தாய் என்பதே முக்கியம் என்பதற்கு சாட்சியானார்.**

# தரிசனக்காரனான மேய்ப்பன் - ஆமோஸ்

MR. ISAAC KAMALESH

2nd WEEK MESSAGE - OT - தரிசன களம்

**"தரிசனக்காரனே, நீ போய்விடு, யூதா தேசத்துக்கு விரைந்தோடு. அங்கே பிழைப்பு தேடி, அப்பம் தின்று, தீர்க்கதரிசனம் சொல். பெத்தேலிலே இனித் தீர்க்கதரிசனம் சொல்லாதே. இது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும், ராஜ்யத்தின் அரண்மனையுமாயிருக்கிறது"** *என்று சொன்னது யார்? யாரிடம் என்று பார்த்தால் ராஜா ஓர் தேவ ஊழியக்காரனிடம் சொன்னது.*

*இஸ்ரவேலிலே ஆரம்ப நாட்களில் தீர்க்கதரிசியை "தரிசனக்காரன்" (ஹோசே) என்றும் "ஞான திருஷ்டிக்காரன் (ரோயே) என்றும் அழைத்தனர். பிற்காலத்தில் "தீர்க்கன்" (நாபி) என்று அழைத்தனர். அந்நாட்களில் கடவுளிடமிருந்து செய்தியைக் கேட்டு ஜனங்களுக்கும், ஏன் ராஜாக்களுக்கும் தரிசனங்களைச் சொல்வதினால், தீர்க்கதரிசிகளுக்கு அரசு மானியம், அரசு ஊதியம் கொடுத்து பராமரிக்கப்பட்டார்கள் என்பதை வேதத்தில் பல இடங்களில் பார்க்க முடிகிறது. அமத்சியா, ஆமோசையும் இப்படிதான் இவன் யூதா ராஜ்யத்தின் வருமானத்தில் வாழ்பவன் என்றும், பிழைப்புக்காக தீர்க்கனாக இருக்கிறான் என்றும் தவறுதலாக புரிந்து "நீ யூதா தேசத்துக்கே ஓடிப் போ..." என்கிறான். ஆனால் ஆமோஸின் பதில் தாழ்மையாக இருந்தாலும் கனம் பெற்றது. ஆமோஸின் பதில் "நான் தீர்க்கதரிசியுமல்ல (நீ நினைப்பது போல் தகப்பன், பிள்ளை, பேரன் என்று குடும்பம் முழுவதும்) மக்கள் பணத்தில் வாழ்பவனும் அல்ல. நான் "மேய்ப்பன்". மேலும் அத்தி தோட்டத்தின் சொந்தக்காரன் என்கிறார். முதல் அதிகாரத்தின், முதல் வசனத்தில் வரும் மேய்ப்பன் என்ற சொல்லுக்கு ஆடுகளை மேய்ப்பவன் என்று பொருள். எபிரேய மொழியில் "நோகேட்" என்றும், ஏழாம் அதிகாரத்தில் வரும் மேய்ப்பன் என்ற சொல்லுக்கு மாடுகளை மேய்ப்பவன் அதாவது எபிரேய மொழியில் "போக்கோ" என்றும் உள்ளது. மேலும், அவன் தோட்டத்தைப் பார்க்கும்போது, இவன் மந்தை மற்றும் தோட்டங்கள் கொண்ட ஓர் செல்வ சீமான். நாம் புரிந்துகொள்ளும்படி சொன்னால் "பண்ணையார்". ஆனால் ஆமோசோ தன்னை ஓர் "மேய்ப்பன்" என்றே அடையாளம் காட்டிக்கொள்கிறார். ஆமோஸ் என்னும் பெயருக்கு அர்த்தம் "சுமை தாங்கி செல்பவர்". இவருடைய சொந்த ஊர் "தெக்கோவா". இது எருசலேமிலிருந்து சுமார் பத்து மைல் தூரத்தில் அமைந்த சிறிய கிராமம்.*

*சுமார் 120 ஆண்டுகள் மூன்று ராஜாக்களின் கீழ் ஒன்றாக இருந்த இஸ்ரவேல் தேசம் சாலொமோனுக்கு பிறகு சுமார் கி.மு 922இல் வட தேசம், தென் தேசம் என்று பிரிந்தது. இதில் தென் தேசம் யூதா என்றும், வட தேசம் இஸ்ரவேல் என்றும் அழைக்கப்பட்டது. எருசலேமைத் தலைமையாக கொண்ட யூதா தேசம் அதன் அருகே அமைந்த இந்த கிராமத்தில் வாழ்ந்த ஆமோசின் காலம் 8ஆம் நூற்றாண்டு. இவன் ஊழியம் செய்த பகுதியோ வட தேசம்.*

*இந்த ஆண்டு முழுவதும் களங்களில் வீரியத்தையும், வேகத்தையும், தைரியத்தையும், தரிசன செயல்பாடுகளையும் படித்து வருகிற நமக்கு ஆமோசின் கள வீரியத்தை அறிந்துகொள்ள ஆமோஸ் புத்தகத்தின் ஒன்பது அதிகாரத்தையும் குறைந்தது மூன்று முறையாவது நீங்கள் வாசிக்க வேண்டும். மேலும் இங்கே பகிர்ந்து கொண்ட குறிப்புகளையும் உங்கள் மனதிரையில் படமாக கொண்டு வந்து வசனங்களை வாசிக்க வேண்டும். இந்த புத்தகம் பழைய ஏற்பாட்டில் கடைசி 12 புத்தகங்களில் மூன்றாவது புத்தகம். இந்த பன்னிரண்டு புத்தகங்களையும் சிறையிருப்புக்கு முன், சிறையிருப்புக்கு பின் அல்லது சிறையிருப்பில் எழுதப்பட்டதா என்பதை முதலில் அறிய வேண்டும். ஆமோஸ் சிறையிருப்புக்கு முன் எழுதப்பட்டது. அடுத்தது தீர்க்கதரிசனம் யாருக்கு உரைக்கப்படுகிறது.*



*ஏன் மற்றும் யாரால் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டால் புரிந்துக்கொள்ள இனிமையாக இருக்கும். நாம் பார்க்கும் ஆமோஸ் யூதா (தென் தேசம்) பகுதியைச் சேர்ந்தவன். ஊழியம் செய்த களமோ இஸ்ரவேல் (வட தேசம்), யாருக்கு ஊழியம் என்று பார்த்தால் அரசாளுபவர்களுக்கு. அரண்மனை என்ற சொல் மட்டும் 14 முறை வருகிறது. அதாவது முதல் இரண்டு அதிகாரத்தில் மட்டும் 6 புறஜாதி இராஜ்யத்திற்கும், அடுத்த நான்கு அதிகாரத்தில் இஸ்ரவேல் மற்றும் யூதாவுக்கும் உண்டான செய்தி. தேசத்தின் நிலையைப் பார்த்தால் அரசாளுபவர்களிடம் நேர்மை இல்லை, நீதி மன்றத்தில் அநீதி, லஞ்சம், பொருளாதார வளர்ச்சி, செழிப்பு, பாவம் கரைபுரண்டோடிய காலம், ஆன்மீக வீழ்ச்சி, கடவுளைப் புறக்கணித்து பண்டிகையில் மகிழ்ச்சி, வேதத்தை முற்றும் மறந்தது என்ற சூழ்நிலைதான். இதை "14 யூதாவின் பாவங்கள்", "சமாரியாவின் 3 பாவங்கள்" (4ஆம் அதிகாரம்), "தேவன் வெறுக்கும் 7 காரியங்கள்" (5:21-23), "இஸ்ரவேலின் (வட தேசம்) 10 பாவங்கள்" (8:4-6) என நாம் இதே புத்தகத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.*

*ஆமோசின் துணிச்சலைப் பார்க்கும்போது கடவுளின் வார்த்தையைக் கேட்டும் (1:2, 3; 3:1, 7-9; 7:8), கடவுள் காட்டிய காட்சியின் தரிசனத்தைப் பார்த்தும் (1:1; 7:1; 8:3), அப்படியே சொல்ல வேண்டிய மக்களுக்கு அதுவும் தன்னை ஏற்றுக்கொள்ளாத ஜனக்கூட்டத்திற்கு (வட தேசம்) சென்று உரைத்ததுதான். புத்தகத்தின் 5 தரிசனத்தை 7ஆம் அதிகாரம் துவங்கி 9ஆம் அதிகாரம் வரை பார்க்கலாம். அதாவது வெட்டுக்கிளி, அக்கினி, தூக்கு நூல், பழக்கூடை மற்றும் பலிபீடத்தின் மேல் ஆண்டவர் என்ற 5 தரிசனத்தையும் அப்படியே ஜனங்களுக்கு சொல்லுவதைப் பார்க்கலாம். ஆமோஸ் செய்தியின் சாராம்சம் பாவத்திற்கு பெண்களும் பொறுப்பாளிகள். அழிந்தும் அறிவில்லை, பலியினால் பயனில்லை, அழிவிற்கு முன் அகந்தை, கர்த்தரின் நாள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இது அனைத்தும் தைரிய பிரசங்கியின் பிரசங்கத் தலைப்பு.*

*களத்தில் வீரியம் கண்ட ஆமோஸ் சொன்ன, நடக்கப்போகும் முன்னறிவிப்பில் 32 நிறைவேறிவிட்டது. இன்னும் 4 முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்றால் தம்பி, தங்காய் உன் கேள்வி எனக்குப் புரிகிறது. அந்த 4 நிறைவேறாத முன்னறிவிப்பு எது? ஏன் நிறைவேறவில்லை? என்பது தானே. ஆம் அதை இந்தச் செய்தியில் சொல்லி முடிக்கிறேன். அதற்கு முன் ஓர் அறைகூவல். நீ ஒரு தொழில் முனைவோனாக ஆமோசைப் போல வட தேசத்திற்கு சென்று ஊழியம் செய்ய ஆயத்தமா? ஏனென்றால் நிறைவேறாத 4 முன்னறிவிப்புகள் உன் காலத்தில் நிறைவேறும். அந்த 4 முன்னறிவிப்புகள் இதோ.*

**கர்த்தர் சீயோனிலிருந்து கெர்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார். அதினால் மேய்ப்பனின் தாபரங்கள் துக்கங்கொண்டாடும். கர்மேலின் கொடுமுடியும் காய்ந்து போகும்.**



# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!

## பூ பணித்தளம் - கின்னோர் மாவட்டம் - இமாச்சலப் பிரதேசம்

Mr. Suriya Kumar

இந்தியாவின் தலை ஆபரணமாய் வடக்குப் பகுதியிலுள்ள அழகிய இமாச்சலப் பிரதேசத்தின் திபேத் (சீனா) எல்லை ஓரம் உள்ள கின்னோர் மாவட்டத்தின் ஒரு வருவாய் வட்டம் பூ. கடல் மட்டத்திலிருந்து 16000 அடி முதல் 22000 அடி வரை உயரம் உள்ள மலைப்பகுதி இது. நமது ஊட்டியை விட 3 மடங்கு அதிகம்.

இங்கு கின்னோரி, போத், லாமா போன்ற பழங்குடி மக்கள் அதிகம் வாழ்கின்றனர். பெரும்பாலும் புத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். அநேகர் இந்து பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கின்றனர். 2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி பூ வருவாய் வட்டாரத்தில் 23 வருவாய் வட்டாரத்தில் 23206 தொகை கொண்ட மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் சுமார் 485 பேர் மட்டுமே கிறிஸ்தவர்கள். இமாச்சலப் பிரதேசத்தில் கிறிஸ்தவர்கள் வெறும் 0.1 % மட்டுமே.

### கின்னோர் கலாச்சாரம்:

ஒரு மனைவி 2க்கும் மேற்பட்ட சகோதரர்களைத் திருமணம் செய்யும், பல கணவர் திருமண முறை (பகுபத்திபிரதா அல்லது திரௌபதி பிரதா) இன்றும் சில இடங்களில் பின்பற்றப்படுகிறது.

ஆவி வணக்கம் கொண்ட இவர்கள் ஆழமான பக்தியும், மூட நம்பிக்கையும் கொண்டவர்கள். இவர்களுக்குத் தேவையான குளிர் ஆடைகள் மற்றும் துணிகளை இவர்களே நெய்துக் கொள்கின்றனர். ஆப்பிள் உற்பத்தி இவர்களது பிரதானத் தொழில் “லாமா” என்ற வார்த்தை புத்த மதத்தை பின்பற்றும் மக்களைக் குறிக்கும் சொல். இதன் பொருள் போதகர் அல்லது மதகுரு என்பது. நிறைய புத்த மடாலயங்கள் இங்கு உண்டு.

### சாதகங்கள்:

- இங்கு ஏற்கனவே ரிகோம்பியோ என்ற பணித்தளம் அருகிலுள்ளது.
- புத்த மதம் கடவுள் நம்பிக்கை இல்லாத கொள்கைக் கொண்டது. இதனால் நம்பிக்கையின் தேவனை அறியும் வாய்ப்பு அதிகம்.
- சவால் நிறைந்த சாகசங்களுக்கு இங்கு பஞ்சம் இருக்காது.

### ஜெபியுங்கள்:

1. கின்னோரி, லாமா, போத் மக்களினங்கள் இயேசுவை அறிய வேண்டும்.
2. இவர்களிடையே மூடநம்பிக்கை மாறி, தெய்வ நம்பிக்கைப் பெருக வேண்டும்.
3. உயர்ந்த மலைப் பகுதிகளில் வாழும் இவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் மற்றும் கல்வி வசதிகள் கிடைக்க வேண்டும்.
4. நிலச்சரிவு, மேக வெடிப்புப் போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து இம்மக்களைக் கர்த்தர் காக்க வேண்டும்.

**இந்த மலைமக்களும் மன்னவன் இயேசுவை அறிந்துக் கொள்ள நீ முன் வருவாயா?**



# பிலிப்பைன்ஸ்




Mr. Benjamin & Dr. Ahima

PRAYER POINTS - CATHOLIC COUNTRIES

தென்கிழக்கு ஆசியாவில் 7,600க்கும் மேற்பட்ட தீவுகளைக் கொண்ட ஒரு அழகான தீவு நாடு பிலிப்பைன்ஸ். மலைகள் மற்றும் மழைக்காடுகள் முதல் கடற்கரைகள் மற்றும் நகரங்கள் வரை, இது பன்முகத்தன்மையால் நிறைந்துள்ளது. அதன் துடிப்பான திருவிழாக்கள், வெப்பமண்டல காலநிலை மற்றும் வலுவான சமூக உணர்வு ஆகியவற்றால், பிலிப்பைன்ஸ் பெரும்பாலும் 'கிழக்கு கடல்களின் முத்து' என்று அழைக்கப்படுகிறது.

- ✦ தலைநகரம் : மணிலா
- ✦ நாணயம் : பிலிப்பைன் பெசோ (PHP)
- ✦ மொழிகள் : பிலிப்பைன்ஸ், ஆங்கிலம், மேலும் பல உள்ளூர் பேச்சுவழக்குகள்
- ✦ தலைவர் : ஃபெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர்.
- ✦ மக்கள் தொகை: 117 மில்லியன்

**மதம் மற்றும் பொருளாதார நிலப்பரப்பு:** பிலிப்பைன்ஸ் உலகின் மிகப்பெரிய கிறிஸ்தவ பெரும்பான்மை நாடுகளில் ஒன்றாகும். 2020 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பிலிப்பைன்ஸில் சுமார் 84% பேர் கிறிஸ்தவர்கள், தோராயமாக 79% பேர் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் மற்றும் சுமார் 5% பேர் பிலிப்பைன்ஸ் இன்டிபென்டன்ட் சர்ச், இக்லேசியா – நி – கிறிஸ்டோ, செவன்த்-டே அட்வென்டிஸ்ட் சர்ச், அப்போஸ்தலிக் கத்தோலிக்க சர்ச், யுனைடெட் சர்ச் ஆஃப் கிறிஸ்ட், உறுப்பினர்கள் சர்ச் ஆஃப் காட் இன்டர்நேஷனல் மற்றும் பெந்தேகோஸ்தேக்கள் உள்ளிட்ட புராட்டஸ்டன்ட் மற்றும் பிற கிறிஸ்தவ பிரிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர். இஸ்லாம் போன்ற பிற நம்பிக்கைகள் சுமார் 6% மக்களால் பின்பற்றப்படுகின்றன. நாட்டில் போதுமான இயற்கை வளங்கள், அதிக ஜனநாயகம் மற்றும் படித்த மக்கள் இருந்தாலும், பலர் வறுமையில் வாழ்கின்றனர், விவசாயிகள் நில உரிமையில்லாமல் உள்ளனர். இங்கு ஊழல் அதிகமாக உள்ளது.

**பிலிப்பைன்சுக்கான ஜெபக் குறிப்புகள்:**

**1. கிறிஸ்தவ தேவாலயம் - ஆவிக்குரிய வளர்ச்சி:**

- ✦ இன்னும் பல பிலிப்பைன்ஸ் தேவாலயங்கள் ஆவிக்குரிய விழிப்புணர்வைப் பெற்று மிஷனெரிகளை அனுப்ப ஜெபிப்போம்.
- ✦ பல பிராந்தியங்களிலுள்ள சபை விசுவாசிகளின் ஒற்றுமைக்காக ஜெபிப்போம்.
- ✦ தீவிரவாதம் மற்றும் நீண்டகால சமூக-அரசியல் மோதல்களில் ஈடுபடும் தீவிரவாத இயக்கங்களான அபு சயாஃப் மற்றும் மௌட் குழுக்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மிண்டானாவில் (Mindanao) உள்ள குடும்பங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

**2. வெளிநாட்டு பிலிப்பைன்ஸ் தொழிலாளர்கள் (OFWs)**

- ✦ 10 மில்லியனுக்கும் அதிகமான பிலிப்பைன்ஸ் மக்கள் வெளிநாடுகளில் கடினமான சூழ்நிலைகளில் வேலை செய்கிறார்கள். அவர்களின் பாதுகாப்பு மற்றும் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற ஜெபிப்போம்.
- ✦ உலகளவில் அவர்களுக்குச் சேவை செய்யும் ஊழியங்கள் மூலம், OFWகள் இயேசுவைச் சந்திக்க வேண்டும் என்று நாம் ஜெபிப்போம்.

**3. பிலிப்பைன்ஸில் கிறிஸ்தவ துன்புறுத்தல்:**

- ✦ தீவிரவாதக் குழுக்களிடமிருந்தும், ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களிடமிருந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் மிண்டானாவில் உள்ள விசுவாசிகளுக்காக ஜெபிப்போம்.
- ✦ மோதல்களால் வீடுகள், நிலங்கள் அல்லது வாழ்வாதாரத்தை இழப்பவர்களுக்காக ஜெபிப்போம்.
- ✦ துன்புறுத்துபவர்களின் இருதயங்கள் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட ஜெபிப்போம்.

**புனித வெள்ளி அன்று பின்பற்றப்படும் மூடநம்பிக்கைகளுக்காக ஜெபிப்போம்:**

- ▸ புனித வெள்ளி அன்று குளிக்க வேண்டாம் – இந்த நாளில் குளிப்பதால் நோய் அல்லது துரதிர்ஷ்டம் ஏற்படும் என்றும் மக்கள் நம்புகிறார்கள்.
- ▸ புனித வெள்ளி அன்று அதிக தூரம் பயணிக்க வேண்டாம் – இந்த நாளில் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சிலர் நினைக்கிறார்கள்.
- ▸ புனித வாரத்தில் (குறிப்பாக புனித வெள்ளி) இயேசுவின் சிலுவை மரணத்தை சிலர் மீண்டும் தத்ரூபமாக நடிக்கிறார்கள். பிலிப்பைன்ஸிலுள்ள கத்தோலிக்கத் திருச்சபை அதிகாரப் பூர்வமாக உண்மையான சிலுவை மரணங்களை ஆதரிக்காததால், சிலர் இன்னும் தீவிரமாக, பாதுகாப்பு செய்யப்பட்ட ஆணிகளைப் பயன்படுத்தி, குறுகிய காலத்திற்கு தங்களை சிலுவையில் அறைய ஒப்புக்கொள்கிறார்கள்.

Rev. Daniel David

# பெண்களுக்கான ஜெபக் கரிசனைகள் - பணித்தளம்

### "கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்." (நீதி. 31:30b)

வேதாகமத்திலும், திருச்சபை சரித்திரத்திலும் பெண்கள் ஆண்டவருக்காக எழுந்து பிரகாசித்ததை பல இடங்களில் நாம் காண்கிறோம். நம்முடைய பணித்தள சபைகளிலும் கூட ஆராதனை மற்றும் ஊழியப் பங்கெடுப்புகளில் பெண்களே முதன்மையானவர்களாகக் காணப்படுகின்றனர். பெண்கள் அனைவரும் தங்களை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துக் கொள்ளவும், கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதை நிறைவேற்றவும் நாம் ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும்.

## ஜெபக் குறிப்புகள்:

- ✦ நமது பணித்தள கிராமங்களில் வாழும் அனைத்து பெண்களும் இரட்சிக்கப்பட, சுவிசேஷத்தைக் கேட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ள...
- ✦ விசுவாச மகளிரைத் தேவன் ஆசீர்வதித்து உயர்த்தவும், அவர்கள் வாழ்வின் தேவைகள் எல்லாவற்றையும் சந்திக்கவும்
- ✦ பணித்தள சபைகளிலுள்ள விதவைகள், ஆதரவற்றோர் மற்றும் முதிர் வயது பெண்கள் கரிசனையோடு விசாரிக்கப்படவும், வழி நடத்தப்படவும்
- ✦ சமூகத்தில் காணப்படும் பெண்களுக்கெதிரான மனநிலை மற்றும் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்பட
- ✦ பெண்கள் விடுதலையோடு இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், ஆராதிக்கவும் முடியாதபடி உள்ள தடைகள் நீங்க
- ✦ பல்வேறு நோய்கள் மற்றும் பலவீனங்களால் அவதியுறும் பெண்களை கர்த்தர் குணமாக்கி ஆசீர்வதிக்க
- ✦ பெண்களின் வாழ்வாதாரத் தேவைகளை சந்திப்பதற்கும், அவர்களின் முன்னேற்றத்திற்குமான திட்டமிட்ட நிகழ்வுகள் பணித்தளங்களில் நடைபெற
- ✦ நமது பணித்தள சபைகளில் பெண்களுக்கான சிறப்பு கூடுகைகள், விழிப்புணர்வு முகாம், தலைமைத்துவ பயிற்சி மற்றும் சிறு குழுக்கள் கிரமமாக நடைபெற
- ✦ பெண்கள் மத்தியிலிருந்து பணித்தளங்கள்தோறும் சுவிசேஷகர்கள், வேதாகம பெண்கள் (Bible Women) மற்றும் தன்னார்வ ஊழியர்கள் எழும்ப
- ✦ பெண்கள் மத்தியிலான ஊழியங்களைப் பணித்தளங்களில் ஒருங்கிணைக்க, முன்னேற்றப்பணியைப் போலவே தேசிய மற்றும் பிராந்திய அளவிலான பெண்கள் பிரிவு உருவாக்கப்பட
- ✦ பெண்களுக்கான சிறப்பு புத்தகங்கள், மாதாந்திர செய்தி மடல்கள் போன்றவை ஒவ்வொரு மொழியிலும் உருவாக்கப்பட்டு, விநியோகிக்கப்பட
- ✦ சமூக ஊடகங்களின் வழியாக பெண்களை சுவிசேஷத்தினால் சந்திக்கவும், பின் தொடர் பணி செய்யவும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட
- ✦ இந்திய பெண்கள் இயேசுவுக்கு சாட்சியாக எழுந்து பிரகாசிக்க ஜெபிப்போம்.



Dr. Godwin & Dr. Azubha

# இருமுனை மனநிலை நோய்
## Bipolar Disorder

### என்ன?

மூளை உணர்ச்சிகளைச் சமநிலைப்படுத்துவதில் ஏற்படும் சிரமமான இருமுனை மனநிலை நோய் இளம் பருவத்தினர் மற்றும் வாலிபர்களை (15-25 வயது) அதிகமாக பாதிக்கிறது. இயல்பை விட அதீத உற்சாகம் (Mania) அல்லது தீவிர மனச்சோர்வு (Depression) என மனநிலை மாறிக் கொண்டேயிருக்கும். இது சிறிது காலம் அப்படியே நீடிக்கவும் வாய்ப்புள்ளது.

இருமுனை மனநிலை நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் மிகவும் உயர்ந்த மனநிலை மாற்றத்தோடோ, மிகவும் தாழ்ந்த மனநிலை மாற்றத்தோடோ, சில சமயங்களில் சாதாரண மனநிலையிலோ இருக்கலாம்.

### ஏன்?

உயர் மதிப்பெண்கள் பெற வேண்டும் என்று பள்ளியில் கொடுக்கும் மனஅழுத்தம், முறிந்த நட்புகள், காயப்படுத்தும் உறவுகள், சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்துதல் போன்ற மன அழுத்தங்களால் இருமுனை மனநிலை நோய் ஏற்படுகிறது. டீனேஜர்களும், இளைஞர்களும் தங்களைப் புரிந்துக்கொள்ளாமல் அதிகமாக உணர்ச்சிவசப்படுவது அல்லது தன்னை வெறுமையாக உணர்வதால் ஏற்படுகிறது.

### எப்படி?

அதீத உற்சாக மனநிலையின்போது, ஒருவர் மிகவும் தன்னம்பிக்கை கொண்டவராகவோ அல்லது தடுக்க முடியாதவராகவோ உணரலாம். மிக வேகமாக அல்லது இடைவிடாமல் பேசலாம். மிகக் குறைந்த நேரம் தூங்குபவராக, கேள்வி கேட்கும்போது எளிதில் எரிச்சலடைபவராக, பணத்தைச் செலவழிப்பதில் சந்தோஷப்படுபவராக, பாலியல் செயல்பாடு அல்லது போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுபவராக இருப்பார்.

மனநிலை சரியில்லாத நேரங்களில், ஒருவர் ஆழ்ந்த சோகம் அல்லது உணர்வின்மையை உணரலாம், நண்பர்கள், விளையாட்டு அல்லது ஆலய நடவடிக்கைகளில் ஆர்வத்தை இழக்கலாம், ஓய்வுக்குப் பிறகும் சோர்வாக உணரலாம். கவனக்குறைவாக காணப்படலாம். இருமுனை மனநிலை நோய் பொதுவானதா?

ஆம், ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவருக்கும் பொதுவானதே. உலகம் முழுவதும் அநேகர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு சரியான சிகிச்சை, ஆதரவு மற்றும் அவர்களைப் புரிந்து நடந்துகொள்ளும்போது, ஆரோக்கியமான மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையை இவர்கள் வாழ முடியும்.



### புள்ளிவிவரங்கள்:

1. இந்தியாவில், 2026ஆம் ஆண்டுக்கான இந்திய மனநல சங்கத்தின் சமீபத்திய ஆய்வின்படி, இந்நோய் தாக்குபவர்களில் சுமார் 60% பேர் 35 வயதுக்கு குறைந்தவர்களாக உள்ளனர். குறிப்பாக இருமுனை மனநிலை நோயின் தொடக்க வயது 19 முதல் 20 வயதுக்குள் உள்ளது.
2. பெற்றோரில் ஒருவருக்கு இருமுனை மனநிலை நோய் இருந்தால், குழந்தைக்கு 15 முதல் 30% பாதிக்கும் அபாயம் உள்ளது. இரு பெற்றோருக்கும் இருந்தால், அபாயம் 50-75% ஆக உயர்கிறது.
3. சுமார் 150 இந்தியர்களில் ஒருவர் (சுமார் 0.6%) அதாவது சுமார் 60-80 லட்சம் பேர் தற்போது இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மதிப்பிடப்படுகிறது.
4. இந்தியாவில் இருமுனை மனநிலை நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 70% முதல் 90% பேர் சிகிச்சை பெறாமல் உள்ளனர்.
5. பிப்ரவரி 2025 நிலவரப்படி, தேசிய தொலை-மனநல உதவி எண் 18 லட்சத்திற்கும் மேற்பட்ட அழைப்புகளை பெற்றுள்ளது; இவை மனநிலை மாற்றங்கள் மற்றும் இருமுனை அறிகுறிகளுக்கான உதவி கோரிக்கைகள் ஆகும்.

"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." ஏசாயா 26:3

### ஜெபக் குறிப்புகள்:

1. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை மாற்றங்கள் நிலைப்படுத்தப்படுவதற்காக...
2. எந்த சூழ்நிலையிலும், வாலிபர்கள் தங்கள் உணர்ச்சிகளையும், மனநிலையையும் கர்த்தரின் உதவியோடு ஞானமாக (ஜெபம் மற்றும் வேதாகம வாசிப்பின் மூலம்) கையாள...
3. இருமுனைமனநிலைகோளாறால்பாதிக்கப்பட்டவர்கள் மேல் இரக்கம் காட்டும் குடும்பம் மற்றும் நண்பர்கள் போன்ற அவர்களுக்கு ஏற்ற சூழ்நிலை அமைய...
4. அறிகுறிகளை விரைவில் கண்டறிந்து, சரியான சிகிச்சைத் திட்டங்களை வழங்கும் மருத்துவர்கள், ஆலோசகர்கள் மற்றும் மனநல மருத்துவர்களுக்காகவும் ஜெபிப்போம்.

விடியலுக்குக் காத்திருந்த மக்களுக்கு விடியலைக் கொடுத்த அருட்பணியாளர்

# ஓர் இனிய உரையாடல்



அருட்பணியாளரின் அறிமுகம்: என் பெயர் M.மாதவராய். நான் 1967இல் கன்னன்குளம் கிராமத்தில், குமரி மாவட்டத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். நான் பிறந்த மூன்று மாதத்திலேயே என் தாயை விட்டு பிரிந்தேன். 1969இல் 7வது படிக்கும் போது என் தகப்பனாரும் மரித்தபடியால் என் 2 சகோதர, சகோதரிகள் என்னை பாராமரித்தார்கள். பின்பு படிக்க வசதி இல்லாத காரணத்தால், நான் கூடன்குளம் CMS Children Homeஇல் சேர்ந்து படித்தேன்.

**கேள்வி: நீங்கள் எப்பொழுது கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டீர்கள்?**

அருட்பணியாளர் பதில்: IPC சபையில் 1970இல் நடந்த ஒரு கன்வென்ஷன் கூட்டத்தில் கர்த்தரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை எப்பொழுது ஏற்பட்டது?**

அருட்பணியாளர் பதில்: என் பள்ளி படிப்பு முடித்து விடுதியிலிருந்து வரும் போது "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்" (சங்கீதம் 116:12, 13) என்ற வசனத்தின்படி கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வைராக்கியத்தோடு இருந்தேன். 1978ஆம் ஆண்டு FMPB Missionary Mr. Jeevadhas Peter அண்ணன் மூலம் வட இந்தியாவின் ஊழியம் குறித்து அறிந்து, FMPBஇல் முழு நேர ஊழியனாக இணைந்தேன். இது என் வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தது.

**கேள்வி: மனமாற்றத்திற்குப் பிறகு நீங்கள் சந்தித்த சவால்கள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: கர்த்தரின் பணியைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் 1974 மே மாதத்தில் திருச்சியில் ஒரு கம்பெனியில் செய்த வேலையை விட்டுவிட்டேன். இதனால் பல பிரச்சினைகள் மற்றும் தடைகள் ஏற்பட்டது. என் குடும்பத்தினர் தமிழே பேச தெரியாத நீ எப்படி வட இந்தியாவிற்கு சென்று ஊழியம் செய்வாய் என்று கிண்டல் செய்தனர். வட இந்தியா மக்கள் மோசம் அங்கே போகாதே என்று பயமுறுத்தினர். எல்லாவற்றையும் மேற்கொள்ள கர்த்தர் உதவிச் செய்தார்.

**கேள்வி: கலாச்சாரம் கடந்து சென்று நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்ற தாகம் எப்படி வந்தது?**

அருட்பணியாளர் பதில்: "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்" (எரே. 1:5) என்ற வசனம் என்னை ஊக்கப்படுத்தியது. ஆண்டவரை அறியாத ஜனங்களிடையே ஊழியம் செய்ய வேண்டும் என்ற தாகம் ஏற்பட்டது.

**கேள்வி: ஊழியத்திற்கு வந்த பிறகு களத்தில் நீங்கள் சந்தித்த பாடுகள், போராட்டங்கள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: ஒரிசா, ஜார்க்கண்ட், வடக்கு பீகார், மாதுபனி, சீதாமரி, சிவான், குஜராத்-வியரா, தரம்பூர், பாஜிபுரா, நிஜர், பத்தேபுரா, நேத்தரங், பார்டோலி, சொரம்பா, ஊனாய், சூரத் போன்ற பணித்தளங்களில் பணி செய்தேன். சில இடங்களில் இரவு நடத்தும் கூட்டத்தில் கல்லெறிவார்கள், நல்ல வீடு கிடைப்பதில்லை. மாத்வா (Maadvaa) கிராமத்தில் 40 பேர் சேர்ந்து அடித்தனர், ஆலயம் இடிக்கப்பட்டது. 1992இல் என் மனைவி செல்வி கேன்சரில் மரித்தாள். இப்படி பல தடைகள், சோர்வு, தனிமை வந்த போதிலும் பொறுமையோடு ஜெபித்து ஊழியம் செய்தேன். கர்த்தரின் கிருபையால் ஊழியத்தில் தொடர்ந்து நிற்க முடிந்தது.

**கேள்வி: ஊழியத்தின் பாதையில் தேவன் தந்த தரிசனம் என்ன?**

அருட்பணியாளர் பதில்: குஜராத் மற்றும் மஹாராஷ்ட்ரா மாநிலங்களில் சுவிசேஷம் அறிவித்து, அங்கு ஆலயங்கள் கட்டப்பட வேண்டும். புது தலைமுறைகளை ஊழியர்களாக உருவாக்க வேண்டும்.

**கேள்வி: தரிசனத்தை நிறைவேற்ற நீங்கள் கொடுத்த விலை கிரயங்கள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: எந்த வசதியும் (பாத்ரூம், கழிவறை) இல்லாத வீட்டில் வாழ்ந்தோம். அங்கு ஒரு வாளி தண்ணீர் 2 ரூபாயாக விற்கப்பட்டது. மேலும் திருடர்கள், விஷப்பாம்புகள், பொருளாதாரப் பிரச்சனை, பிள்ளைகளை விட்டுப் பிரிந்து வாழ்வது, அநேக எதிர்ப்புகள் இவை எல்லாவற்றிலும் ஜெபத்தோடு தொடர்ந்து ஊழியம் செய்ய கர்த்தர் கிருபைச் செய்தார்.

**கேள்வி: விலைக் கிரயம் செலுத்தியதால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: யோசுவா 1:3இல் "உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்." என்ற வாக்கின்படி, எனக்காக ஜெபித்த ஜெபக்குழுக்களின் (கோவில்பட்டி, அயனாவரம், மதுரை, புதுக்கோட்டை, திருச்சி, திருவனந்தபுரம்) ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு கடந்த 48 வருடத்தில் சுமார் 31/2 லட்சம் பேருக்கு சுவிசேஷம் அறிவித்துள்ளேன். மேலும் Outreach Film Programe, Healing meeting, Night meeting, VBS (other children), Sunday School, Mela, Youth மீட்டிங், 40 ஆலயங்கள் கட்டவும் தேவன் கிருபை செய்தார். மேலும் ஜெபத்தினால் 195 தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஆயிரக்கணக்கான பிசாசு பிடித்தவர்கள் விடுதலைப்பெற, போலீஸ் அதிகாரிகள், மந்திரவாதிகள் வியாதியிலிருந்து சுகம் பெற, 40 ஆயிரம் பேர் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள கர்த்தர் கிருபை கொடுத்தார்.

இதை வாசிக்கும் நீங்கள் அனைவரும் நம் இந்திய தேசத்திற்காக ஊழியம் செய்ய முன் வரவேண்டும். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனபடுத்திக் கொள்ளுங்கள்.

**ஜெபிக்க :**

- கமித், குக்னா, வசாவி, சௌதரி, பிலோடி, வாகிடி, வார்லி, நாயக்கா, டோடியா, மாங்கடா, டுங்காரா, ராட்டுவா இன்னும் பல இனத்தார் மெய் வாழ்வுக்குள் வர...
- சுவிசேஷம் அறிவிப்பதில் வரும் தடைகள் நீங்கி, சந்திக்கப்படாத கிராமங்கள் சந்திக்கப்பட...
- 10 ஆண்டுக்குள் 5 ஆலயங்கள் இங்கு கட்டப்பட...
- வாலிபர்கள் முழு நேர ஊழியர்களாக எழும்பிவர ஜெபிப்போம்.

PRAYER POINTS - Mrs. Jeba Saral

# AI Psychosis

**"என்னை நேசிக்க யாரும் இல்லை, நீயாவது என்னை புரிந்து கொள்கின்றாயே!!!" "இவ்வளவு அழகாக பேசும் உன்னை, நான் பார்க்க வேண்டும். எங்கு நாம் சந்திக்கலாம்?"** *இதுதான் இன்றைய வாலிபர்கள் AI chatbotsஇல் கேட்கின்ற கேள்விகள். NPR கணக்கெடுப்பின்படி, 8இல் ஒரு இளம் வாலிபர், தங்களின் மன நிம்மதிக்காக AI chatbotsசை அணுகுகின்றனர். AI psychosis, ஒரு வாலிபரை அல்லது இளம் வாலிபரை இவ்வகை chatbots இல்லாவிட்டால், தற்கொலைக்கு கொண்டு செல்லும் ஓர் குறைபாடாகும். விக்கிபீடியாவின் கணிப்பின்படி, உலகில் இவ்வகை chatbotsசால் ஏற்படும் மரணங்கள், கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 80% உயர்ந்துள்ளது!! இன்றைக்கு இது பல வாலிபர்களின் அன்றாட வாழ்வில் ஓர் அங்கமாகி விட்டது. படிப்பின் காரியங்களுக்காக பயன்படுத்தப்பட்ட இந்த chatbots, இப்பொழுது வாழ்வின் அனைத்து வகையான உணர்ச்சிகளுக்கும் தீர்வைத் தருகின்ற ஒரு புது Super Manஆக மாறி இருக்கிறது. இது இப்பொழுது பலரது வாழ்க்கையில் ஒரு விக்கிரகமாகவும், அந்தி கிறிஸ்துவாகவும் மாறிக் கொண்டு வருகிறது. இவ்வாறான கட்டுகளில் சிக்கி தவிக்கும் இளம் வாலிபர்களுக்காக இம்மாதம் திறப்பில் நிற்க அழைக்கப்பட்டிருக்கும் நாம் பின்வரும் ஜெபக் குறிப்புகளுக்காக தேவனிடம் மன்றாடுவோம்.*

**ஜெபக் குறிப்புகள்:**



- *AI chatbotsஆல் வரும் தீங்குகளை வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்கள் உணர்ந்துக் கொள்ள, தேவன் அவர்களுக்கு உணர்வுள்ள இருதயத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.*
- *உணர்ச்சி சார்ந்த தேடல்களுக்கும், தனிமை வாட்டும் போதும் Chatbotsசை தேடாமல் அன்பின் உருவமாகிய நம் தேவனை வாலிபர்கள் தேட ஜெபிப்போம்.*
- *பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் ஆன்லைனில் எதைப் பார்க்கின்றார்கள், எவ்வளவு நேரம் ஆன்லைனில் இருக்கின்றார்கள் என்று கவனித்து பிள்ளைகளை வளர்க்கக்கூடிய பெலன் மற்றும் ஞானத்தை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.*
- *சமீபத்தில் 14 வயதான ஒரு பள்ளி மாணவன், தன் பெற்றோர்களை விட chatbots தன்னை நன்றாக புரிந்து கொள்கிறது என்று எண்ணினான். chatbots அவனை மிகவும் கவர்ந்ததால், அதை சந்திக்க chatbots கொடுத்த ஒரு விலாசத்தைத் தேடி சென்றதால் மாயம் அடைந்திருக்கிறான். இவ்வகையான சம்பவங்கள் நம் தேசத்தில் நடைபெறாதிருக்க ஜெபிப்போம்.*
- *தற்கொலைக்கு தூண்டும் chatbotsசை அந்தந்த நிறுவனங்கள், குற்றச்சாட்டுகளின் பெயரில் தடை செய்ய ஜெபிப்போம்.*
- *Chatbots சொல்லும் எல்லா கருத்துக்களையும் அப்படியே எடுத்துக் கொள்ளாதபடி, அது ஒரு உயிரற்ற கருவி என்றும், உயிருள்ள, உணர்வுகள் உள்ள மனிதன் அல்ல என்பதையும் வாலிபர்கள் தெளிவாக புரிந்துக் கொள்ள ஜெபிப்போம்.*
- *வாலிபர்கள் Youth fellowship, Teens fellowship மற்றும் Sunday Class போன்ற கூடுகைகளில் உற்சாகமாய் கலந்துக்கொண்டு, உலகத்தின் போலியான மாயையிலிருந்து தெளிவுப்பெற ஜெபிப்போம்.*
- *தாவீது, யோசேப்பு, யாக்கோபு, பர்னபா, மாற்கு, லூக்கா போன்றோர் தங்கள் வாலிபப் பிராயத்தில் வந்த சவால்களை, தங்கள் தேவனின் பெலத்தோடு எப்படி மேற்கொண்டார்களோ, அவ்வாறே நம் வாலிபர்களும் வெற்றி வாழ்க்கை வாழ ஜெபிப்போம்.*

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

## மால்தோ மொழி

**மால்தோ மக்களும் – மால்தோ மொழியும்:**

இந்தியத் துணைக்கண்டத்தில் 2வது மிகப்பெரிய மொழிக்குடும்பம் திராவிட மொழிக்குடும்பம். 19.8%லிருந்து 24.5% மக்கள் திராவிட மொழிகளைப் பேசுகின்றனர். தமிழ் போன்ற தென் மாநில மொழிகள் மட்டுமல்லாமல், வட இந்தியாவிலுள்ள கோண்ட், கோலாம், குடுக், குயி, மால்தோ என இந்த மொழிப்பட்டியல் நீண்டுக் கொண்டே போகிறது. இவைகளில் இராஜ்மஹால் மலைத்தொடர்களில் ஜார்கண்ட் மாநிலத்தில் வாழும் மால்தோ மக்களின் மொழியும் ஒன்று. கண்ணு, பல்லு போன்ற தமிழ் வார்த்தைகள் நிறைய இம்மொழியில் உண்டு.

மலேரியா, காலாஅசார் டி.பி, காலரா போன்ற வியாதிகளினால் 10 லட்சம் பேர் வாழ்ந்த மக்கள் 1991இல் வெறும் ஒரு லட்சமாகக் குறைந்துள்ளனர். இவர்களில் கல்வியறிவு 2%க்கும் குறைவாகவுள்ளது. பாதிக்கப்படக்கூடிய பழங்குடி இனமக்கள் என்ற பட்டியலிலுள்ள இம்மக்கள் மத்தியில் 1979இல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது.

**மால்தோ மொழிபெயர்ப்பு:**

1983ஆம் ஆண்டு குக்னா மொழி பெயர்ப்பாளர் அறிவர். அலைசாமி பால் அவர்களின் ஆலோசனையால் உந்தப்பட்ட அறிவர். ஜார்ஜ் எட்வர்ட்-பிரமிளா தம்பதியர் ஜார்கண்ட் மாநிலத்தில் மால்தோ மொழிபெயர்ப்புப் பணியைத் துவங்கினர்.

இவர்கள் மால்தோ மொழி, கலாச்சாரம் மற்றும் இலக்கணம் கற்று மால்தோ மக்களுக்கு முழு வேதாகமத்தையும் மொழிபெயர்த்துள்ளார்கள். இது 2019ஆம் வருடம் நிறைவுச் செய்யப்பட்டு மால்தோ மக்களுக்குக் கொடுக்கப்பட்டது.

**சபை வளர்ச்சியில் மால்தோ வேதாகமம்:**

★ முதியோர் கல்வி பாடத் திட்ட வகுப்புகள் திறம்பட செயல்பட்டு வருகிறது. 2% மட்டுமே கல்வியறிவுப் பெற்ற இம்மக்கள் கடந்த ஆய்வின்படி 27% கல்வியறிவுப் பெற்றுள்ளனர்.

★ மால்தோ சிறுவர்களுக்கு கல்விக் கொடுக்க, ஆங்கில வழி பள்ளி ஒன்றும், 21 இராஜ்மஹால் ஆரம்பப்பள்ளிகள் மற்றும் விடுதிகளும் துவங்கபட்டுள்ளன.

★ மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்காக மால்தோ மொழியில் வாழ்க்கைக்கு ஒளி, பெண்ணே குடும்பத்தின் விளக்கு, ஒளிவீசும் நட்சத்திரங்கள், வாழ்க்கைச் சரித்திரங்கள், தங்கப் பழம் (படக் கதைப் புத்தகம்), தினத் தியானப் புத்தகம், பாடல் புத்தகம், இயேசு திரைப்படம், பயிற்சிப் புத்தகம் மற்றும் சபை மூப்பர் பயிற்சிப் புத்தகம் போன்ற புத்தகங்களை அறிவர். ஜார்ஜ் எட்வர்ட் அண்ணன் குடும்பம் மொழி பெயர்த்துத் தந்துள்ளனர்.

★ குமார் பகாடியா என்ற மால்தோ கிளை மொழியிலும் மொழி பெயர்ப்பு செய்து வருகிறோம்.

**ஜெபக்குறிப்புகள்:**

▶ தாய்மொழி வேதாகமத்தை எல்லா மால்தோ விசுவாசிகளும் பயன்படுத்தி கர்த்தருக்குள் வளர ஜெபிப்போம்.

▶ உஜ் அவேலி, உகுஜோ சங்காலே போன்ற பத்திரிக்கைகள் மற்றும் வேத தியான நூல்கள் மால்தோ விசுவாசிகளால் பயன்படுத்தப்பட ஜெபிப்போம்.

▶ மால்தோ மொழியில் மிஷனெரி சரித்திரங்கள் மற்றும் ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபிப்போம்.

இந்த பகுதியில் போஜ்புரி, பெகாசி, பெங்காலி, சந்தாலி, தாஸ், கொர்ச்சா, மால்பாஹாடி, ஒராவன் போன்ற பல மொழிகள் பேசப்பட்டு வருகிறது. “எங்கள் மொழியில் உங்கள் கடவுள் பேசுவாரா?” என்று கேட்கும் மக்களின் குரல் இன்றும் தொனித்துக் கொண்டுதான் உள்ளது.

ஒரு வாலிப மிஷனெரியின் அர்ப்பணம் மால்தோ மக்களின் சரித்திரத்தையே மாற்றும் என்றால் உங்களைக் கொண்டும் நம் தேவன் பெரிய காரியங்களைச் செய்ய முடியும்.

**"வாலிபப் பிள்ளைகளே! இந்தக் குரலுக்கு உங்கள் பதில் என்ன?**





PRAYER POINTS - FMPB - மொழி களத்தில் வேதம்

Mrs. Jane

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...



## THE 32 HOUR VIGIL

கவிழ்ந்த டேங்கர் லாரி ஒன்று 21,000 கிலோ எரிவாயுவை ஏற்றி சென்றபோது, அதன் வால்வுகள் சேதமடைந்த நிலையில் பரபரப்பான நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளாகி, நூற்றுக்கணக்கான மக்களுக்கு பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது.

- போக்குவரத்து உரிமையாளர்கள் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் நிறுவனங்கள் வேகத்தை விட பாதுகாப்பை முன்னுரிமையாகக் கருதும்படி ஜெபிப்போம்.
- இந்தியாவின் ஒவ்வொரு நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறச் சாலைகளிலும் தேவனுடைய தெய்வீக பாதுகாப்பு சூழ்ந்து ஒவ்வொருவரையும் காக்கும்படி ஜெபிப்போம்.

## LIFE CUT SHORT

22 வயதான கர்நாடக மாணவர் சகேத் ஸ்ரீநிவாசையா, ஆறு நாட்களுக்கு முன்பு சான் பிரான்சிஸ்கோவில் காணாமல் போனவர், தற்போது உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

- உலகம் முழுவதும் பரவி வாழும் இந்திய இளைஞர்கள் தங்கள் இறுதியான நோக்கத்தையும், அடையாளத்தையும் தேவனில் கண்டடைய, அவர்களின் வாழ்க்கை நித்தியமான ஒன்றில் நிலைபெறும்படி ஜெபிப்போம்.
- தங்கள் அன்புக்குரியவரை இழந்த குடும்பங்களுக்கு தேவன் ஆறுதல் மற்றும் சமாதானத்தைக் கொடுக்கும்படி ஜெபிப்போம்.






## IT'S NOT JUST ABOUT SURVIVING: THE UKRAINIAN FRONTLINE CITY

உக்ரைனின் கெர்சோன் நகரில் வசிக்கும் மக்கள், ரஷ்ய குண்டுவீச்சின் அச்சுறுத்தலின் நடுவிலும், தங்கள் அன்றாட செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

- குழந்தைகள், முதியவர்கள் மற்றும் சிதைந்த குடும்பங்கள் தேவனுடைய அன்பையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளும்படி ஜெபிப்போம்.
- இரு நாடுகளுக்கிடையில் அமைதி நிலவும்படி தொடர்ந்து ஜெபிப்போம்.

## PM: AI TOOL, YOUTH READY

2026 பிப்ரவரி 16–20 வரை புது டெல்லியில் நடைபெற்ற AI உச்சி மாட்டில், பிரதமர் மோடி உரையாற்றி, மிகப்பெரிய திறன் மேம்பாட்டு (skilling) திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

- இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி நெறிமுறையுடனும், நியாயத்துடனும் இருந்து, மனிதர்களை மாற்றுவதற்காக அல்லாமல் அவர்களுக்கு உதவுவதற்காகவே பயன்படுத்தப்படும்படி ஜெபிப்போம்.
- குறிப்பாக குழப்பத்தில் இருக்கும் இந்திய இளைஞர்கள் தெளிவான சிந்தையையும், ஞானத்தையும் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி ஜெபிப்போம்.







## TAMIL NADU'S INSTAGRAM ELECTION

அரசியல் கூட்டங்கள் முதல் ரீல்கள் வரை, அரசியல் கட்சிகள் கவனத்தைத் திருப்பி, தேர்தலைத் திரைபடப் போராட்டமாக மாற்றியுள்ளது, ஏனெனில் சமூக ஊடகம் என்பது வாக்களிப்பவர்களுக்கு மிக முக்கியம்.

- சமூக ஊடகங்கள் மூலம் பொதுமக்கள் ஏமாற்றப்படுவது தவிர்க்கப்பட, தலைவர்கள் உண்மையாய் நடக்க ஜெபிப்போம்.
- வாக்களிப்பவர்கள் ரீல்களின் மேல் சிந்தையைச் செலுத்தாமல், ஆராய்ந்து பார்த்து, ஞானத்தோடு தேர்ந்தெடுக்கும்படி ஜெபிப்போம்.

# வைராக்கியமாக தீமையை எதிர்கொள்ளல்

MR. ISRAEL NATHANIEL EDWARD



கடந்த மாதம், வெளிப்படையான எதிர்ப்பிலிருந்து மறைத்து தேவன் பவுலுக்கு அளித்த பயிற்சியைப் பார்த்தோம். இது, தேவன் கொடுத்த வைராக்கியத்தை செயல்படுத்துவதற்கு முன், அவருக்கு ஒரு உறுதியான அஸ்திபாரத்தை அளித்தது. இந்த மாதம், சீப்புரு தீவிலுள்ள பாப்போவில் பவுல் மற்றும் பர்னபாவின் வாழ்க்கையில் நடந்தவற்றிலிருந்து கற்கப் போகிறோம். தீமையை சரியான வழியில் எதிர்கொள்வதைப் பற்றி புரிந்துகொள்ள இது நமக்கு உதவும். இத்தகைய மோதல்களைத் தேவன் தமது இராஜ்யத்தைக் கட்டுவதற்கு எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை நாம் கற்றுக்கொள்வோம்.

பவுல் கி.பி. 33இல் ஒரு தரிசனத்தில் இயேசுவைச் சந்தித்தார். அதன்பின், அவரது முதல் மிஷனெரிப்பயணம் அந்தியோகியாவிலிருந்து கி.பி. 46-48இல் நடைபெற்றது. இந்தப் பயணத்தின் முதல் கட்டத்தில், பர்னபாவின் சொந்த ஊர் சீப்புரு என்பதால், பவுலும், பர்னபாவும் சீப்புரு தீவில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பத் தொடங்கியிருக்கலாம் (அப். 4:36). அவர்கள் தமது ஊழியமாக முதலில் யூத ஜெப ஆலயங்களில் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தார்கள். தீவு முழுவதும் பயணம் செய்த பிறகு, அவர்கள் பாப்போ என்ற இடத்திற்கு வந்தனர். இந்த இடத்தில், சீப்புரு மாகாணத்தின் ஆளுநராக (ரோமப் புரோகான்சல் என்றும் அழைக்கப்படுபவர்) செர்கியு பவுல் வாழ்ந்து வந்தார் (அப். 13:6-7).

புரோகான்சல் எனும் சொல், சீப்புரு ஒரு செனட் சபை ரோம மாகாணம் என்பதைக் குறிக்கிறது. இது நீண்ட காலமாக ரோம ஆட்சியின் கீழ் இருந்தது. அவற்றில் இராணுவப் படைகள் எதுவும் இருக்காது. அவை பொதுவாக அமைதியான பிரதேசங்களாக இருந்ததால், பவுலும், பர்னபாவும் யூதரல்லாதவர்களுக்கு நற்செய்தியை வழங்கினர். அந்த நேரத்தில், புரோகான்சலான செர்கியு பவுலே, தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொள்ள பவுலை அழைத்தார். இவ்வாறு, முதன்முறையாக ரோம ஆளுநர் மட்டத்திற்கு சுவிசேஷம் சென்றடைந்தது. இந்த ஆளுநருக்கு யூதனான எலிமா என்ற ஒரு ஆலோசகர் இருந்தார். இவர் ஒரே கடவுள் என்ற கொள்கையை உடையவர். ஒரு யூதரை ஆலோசகராக நியமித்ததன் மூலம், செர்கியு பவுல் சத்தியத்தை அறிவதில் ஆர்வம் காட்டினார். ஆனால், அவர் சிலை வழிபாட்டின் பிடியிலிருந்து தப்பியபோதிலும், எலிமாவின் கள்ளப் போதனைகளில் சிக்கிக்கொண்டார். எனவே, பவுல் முன்வைத்த உண்மைகளைச் செர்கியு ஏற்றுக்கொண்டபோது, இருளின் சக்திகள் அவரை இழக்கத் தயாராக இல்லை. எனவே, அவை தங்கள் கருவியான எலிமா மூலம் பவுலைக் கடுமையாக எதிர்த்தன (அப். 13:8). எலிமா சத்தியத்தைச் சிதைத்து, செர்கியுவை அவனது புதிய விசுவாசத்திலிருந்து திருப்ப முயன்றான்.

இப்போது, பவுலுக்கு முன்பு இரண்டு வழிகள் இருந்தன - விலகிச் செல்வது அல்லது தீமையை நேருக்கு நேர் எதிர்கொள்வது. அவர் பிந்தையதைத் தேர்ந்தெடுத்தார். பரிசுத்த ஆவியினால் வல்லமையைப் பெற்று, எலிமாவை பிசாசின் மகன் என்று வெளிப்படுத்தி, தேவனுடைய செம்மையான வழிகளைக் குழப்புவதற்காக அவனைக் கடிந்துகொண்டு (அப். 13:9-10), ஒரு தெய்வீகத் தீர்ப்பை அளித்தார். இது எலிமாவை சிறிதுக் காலம் குருடாக்கியதன் மூலம் அவன் மனந்திரும்ப ஒரு வாய்ப்பளித்தது (அப். 13:11). பகைமை நிறைந்த சூழலில் பவுலின் வைராக்கியமும், உறுதியான நடவடிக்கையும் நீடித்த விளைவை ஏற்படுத்தியது. செர்கியு தேவனுடைய வல்லமையைக் கண்டும், சுவிசேஷச் செய்தியால் ஈர்க்கப்பட்டும் ஆண்டவரை விசுவாசித்தான் (அப். 13:12). தேவன் அவனுடைய விசுவாசத்தைக் கனம்பண்ணி, ஏகாதிபத்திய ரோமில் அவனுக்கு மேலும் செல்வாக்குமிக்க பொறுப்புகளைக் கொடுத்தார். 1887இல் ரோமில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு எல்லைக் கல்லின்படி (லாபிஸ் டிபர்டினஸ் - Lapis Tiburtinus என்றும் அழைக்கப்படும்), சீப்புரு ஆளுநராக அவரது மூன்றாண்டு பதவிக்காலம் (கி.பி. 44-47) முடிந்த பிறகு, அவர் டைபரின் கண்காணிப்பாளரானார்.

செர்கியு பவுல், பவுலின் ஊழியத்தில் உடனடி விளைவை ஏற்படுத்தியிருக்கலாம். அவர் பவுலுக்கும், பர்னபாவுக்கும் பிசீதியாவிலிருந்த அந்தியோகியாவிலுள்ள உயர் குடும்பங்களுக்குப் பரிந்துரைக் கடிதங்களைக் கொடுத்திருக்கலாம் என்று மேரி-பிரான்சுவா பாஸ்லெஸ் கருதுகிறார். அதனால்தான், சீப்புருவை விட்டு புறப்பட்ட பிறகு, பவுலும் பர்னபாவும் கடற்கரையிலுள்ள மற்ற நகரங்களைத் தவிர்த்துவிட்டு, நேராகப் பிரதான நிலப்பரப்பிலுள்ள பிசீதியா அந்தியோகியாவுக்குப் பயணம் செய்தனர் (அப். 13:13-14). ஆளுநரின் உண்மையான மனமாற்றத்திற்கும், அவரது தொடர்ச்சியான செல்வாக்கிற்கும் மிக நீடித்த ஆதாரம், பிசீதியா அந்தியோகியாவில் இருந்த அவரது குடும்பத்தின் எழுச்சியாகும். பல புகழ்பெற்ற ரோம செனட்டர்களும், அதிகாரிகளும் அவரது குடும்ப வழியிலிருந்து உருவானார்கள்.

**அறியப்பட்ட சந்ததியினர் பின்வருமாறு:**

- கி.பி. 94இல் ஒரு தூதர் (சஃபெக்ட்).
- லூசியஸ் செர்ஜியஸ் பாலுஸ், ஒரு செனட்டரும் எழுத்தாளர் புளூடாக்கின் நண்பருமானவர்.
- கி.பி. 168இல் ஒரு தூதர் - இவர் பேரரசர் மார்கஸ் ஆரேலியஸின் நிருபருமானவரும், சிறந்த மருத்துவர் கேலனின் மாணவருமானவர்.
- செர்ஜியா பால்லா, மற்றொரு முக்கிய செனட் குடும்பத்தில் திருமணம் செய்து கொண்ட ஒரு வழித்தோன்றல்.

*நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

*இன்றைய இந்தியாவில், கிறிஸ்தவர்கள் அந்நியப்படுத்தலையும், பரவலான துன்புறுத்தலையும் எதிர்கொள்கிறார்கள். இது நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்நேரத்தில் நமது நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் செல்வாக்குமிக்க சாராரிலிருந்து செர்கியு பவுல் போன்ற விசுவாசிகளைத் தேவன் எழுப்ப வேண்டுமென்று நாம் ஜெபிக்க வேண்டும். பொறுப்போடு தேவசமூகத்தில் ஜெபத்தில் தரித்திருக்கவும், பவுலைப் போல் தீமையை எதிர்க்கவும் தைரியம் கொள்ளுவோமா? அப்போது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியால் நமது நாடு விரைவாக சந்திக்கப்பட வழி பிறக்கும்.*

> **பகைமை நிறைந்த சூழலில் பவுலின் வைராக்கியமும், உறுதியான நடவடிக்கையும் நீடித்த விளைவை ஏற்படுத்தியது.**

–4ஆம் பக்கத் தொடர்ச்சி

**தலைவனின் தரிசனம்:**

இந்த நேரத்தில் நாம் தகப்பனின் சாபத்தீர்ப்பையும் மறந்து விட முடியாது. யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும் பண்ணுவேன் என்ற வார்த்தையும் தலைவனின் தரிசனத்தில் நிறைவேறியது. ஆம், அவர்களுக்கென்றுஎந்தநிலப்பகுதியும்கொடுக்கப்படவில்லை. மாறாக "கர்த்தருடைய வாக்கின்படியே, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சுதந்தரத்திலே லேவியருக்குப் பட்டணங்களையும் அவைகளின் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்" (யோசுவா 21:3). இவ்வாறு லேவியின் கோத்திரம் சிதறடிக்கப்பட்டது. இருப்பினும் கர்த்தருக்காக அவர்கள் காண்பித்த வைராக்கியம் கர்த்தருடைய பங்குகளிலிருந்து முதற்பலன்களையும், தசம பாகங்களையும் (எண். 18: 12, 21) பெற்றுக் கொடுத்தது.

- கர்த்தரே அவர்கள் சுதந்திரம் (யோசுவா 13:33).
- கர்த்தருடைய பட்டயமே அவர்கள் சுதந்திரம் (யோசுவா 18:7).
- கர்த்தருடைய தகனபலிகளே அவர்கள் சுதந்திரம் (யோசுவா 13:14).

**முழவு:**

லேவியின் வாழ்வு மாற்றம் பெற்ற ஒரு நபரின் வாழ்வை விவரிக்கிறது. லேவிக் கோத்திரத்தாரின் அடையாளமாக பிரதான ஆசாரியர்களின் மார்புக்கவசம் கருதப்படுகிறது. இதில் 12 கோத்திரங்களைக் குறிக்கும் 12 கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இது அனைத்து கோத்திரங்களையும் ஞாபகக்குறியாய் ஆசாரியர்கள் தங்கள் இருதயத்தில் சுமந்து கர்த்தருடைய சந்நிதானத்தில் அவர்களுக்காக விண்ணப்பம் செய்யவும், மன்றாடவும், கடவுளுடைய வழிநடத்துதலுக்குள் அழைத்து வரும் ஊடகமாகவும் செயல்படுகிறது. இவ்வாறு லேவியின் இருதயம் கோபத்திற்கு இடங்கொடாமல் அன்பிற்கு அர்ப்பணித்ததாக மாறியது. கர்த்தருக்கு ஆராதனைச் செய்யவும், கர்த்தருடைய நாமத்தினால் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கவும் தெரிந்துக் கொள்ளப்பட்டது (உபா. 21:5). தகப்பனின் சாபத்தை மாற்றி கர்த்தரின் ஆசீர்வாதத்திற்கானது. இத்தகைய அதிசயங்கள் அனைத்தும் கர்த்தரைப் பற்றிக் கொள்ளும்போது மாத்திரமே சாத்தியம். பெயருக்கேற்ற பற்றுதலினால் இத்தகைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட லேவியின் வாழ்வு சிறப்பானதே! கர்த்தரைப் பற்றும் வாழ்வு பரிசுத்தமானது. அது பரிசுத்தத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டது. மேலும் பலனுள்ளது, அது மற்றவர்களுக்கு பலன் கொடுக்கத்தக்கது.

"நீ உன் தேவனாகிய கர்த்தரை விடுகிறதும், என்னைப்பற்றும் பயம் உன்னிடத்தில் இல்லாமலிருக்கிறதும், எத்தனை பொல்லாப்பும் கசப்புமான காரியம் என்று உணர்ந்துகொள்" (எரே. 2:19).

# வாலிபர் ஜெபக்குழுவின் ஆரம்பமும், வளர்ச்சியும்...

கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! மதுரை முன்னேற்றப்பணி மாவட்டத்திலுள்ள வாலிபர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

- ஒவ்வொரு மாதமும் திங்கட்கிழமைதோறும் சங்கிலித்தொடர் ஜெபம் மாலை 6 மணி முதல் இரவு 12 மணி வரை மதுரை வாலிபப் பிள்ளைகளுக்கென்று வாலிபர் பிரிவின் மூலமாக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு வாலிப பிள்ளைகளுக்கும் 15 நிமிடம் என்று பிரித்து சுமார் 25 வாலிபப் பிள்ளைகள் தொடர்ச்சியாக ஜெபித்து வருகின்றனர்.
- லெந்து கால 1000 மணிநேர ஜெப நாட்களில் தினந்தோறும் 15 நிமிடம் ஜெபத்தை ஏறெடுக்கும்படி வாலிப பிள்ளைகளை ஊக்குவித்துள்ளோம்.
- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கூகுள் மீட்டில் (Google meet) இணைந்து வாலிப பிள்ளைகள் ஜெபித்து வருகிறார்கள்.
- மாதந்தோறும் 2வது ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற வாலிபர் கூடுகையில் சுமார் 5 முதல் 10 பிள்ளைகள் கலந்துகொண்டு, தேவனை மகிமைப்படுத்தி வருகிறார்கள்.
- வாரந்தோறும் வாலிபர்கள் நான்கு பகுதிகளில் வாலிப ஜெபக்குழுக்களாக நேரில் கூடி ஜெபித்து வருகின்றனர்.
- மதுரை - தெற்கு பகுதியிலுள்ள வாலிபர்கள் மாதம் ஒரு முறை கூடி வேதத்தைத் தியானித்தும், ஜெபித்தும் வருகின்றனர்.

FMPB இயக்கத்தின் மூலம் நடைபெறும் வாலிபர் கூடுகைகளில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு வாலிபர்களும் மிஷனெரி தரிசனம் பெறவும், தேவப்பணிக்கென்று தங்களை அர்ப்பணிக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# இயேசு சிலுவையிலிருந்து செய்த ஜெபம்

பிரச்சினைகளுக்கும், வேதனைகளின் அழுத்தத்திற்கும் மத்தியில் தான், ஒரு மனிதனின் உண்மையான குணம் வெளிப்படும். அப்போது தான் ஒருவனுக்குள் மறைந்திருக்கும் பலமோ அல்லது பலவீனமோ வெளிக்காட்டப்படுகிறது. ஆண்டவர் ஏழு வார்த்தைகளைச் சிலுவையிலிருந்து சொன்னார். அவைகள்,

அப்பொழுது இயேசு: ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்றார் (லூக்கா 23:34).

''இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (லூக்கா 23:43).

''தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன்'' என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்'' (யோவான் 19:26, 27).

''என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்'' (மத்தேயு 27:46).

''தாகமாயிருக்கிறேன்'' (யோவான் 19:28).

''முடிந்தது'' (யோவான் 19:30).

''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' (லூக்கா 23:46)

ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்ட நிலையிலும், கடவுளின் முழு சித்தத்திற்கு உட்பட்டிருந்தார் என்பது இங்கே பார்க்க வேண்டிய ஒன்றாகும். சிலுவை மரத்தில் தாம் தொங்கிக் கொண்டிருந்த போதும்கூட அவர் பிதாவை முதலாவதாகவும், மற்றவர்களை இரண்டாவதாகவும், தம்மை இறுதியாகவும் வைத்தார். சிலுவையில் இருந்து மொழிந்த முதல் வார்த்தையில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்தவர்களை மன்னித்து இரட்சிக்கும், பிதாவின் சித்தம் செய்யப்படும்படி பிதாவிடம் பரிந்துரை செய்தார். மனந்திருந்திய கள்வனுக்கு விண்ணரசைக் குறித்த நிச்சயத்தின் நம்பிக்கையை இரண்டாம் வார்த்தையில் அருளினார். தம்முடைய சீஷனுக்கு தாய் என்ற உறவையும், தம் தாயாருக்கு மகன் என்று உரிமையையும் மூன்றாம் வார்த்தையில் ஏற்படுத்தினார். ஆண்டவர் இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த வார்த்தைகள் மற்றவர்களுக்காக தம்மை அவர் முற்றிலுமாக ஒப்புவித்ததை விளக்கிக் கூறுகின்றது. தான் முற்றிலுமாக பிதாவினுடைய சித்தத்திற்குக் கட்டுப்பட்டவர் என்ற உண்மையை சிலுவைப் பாடுகளின் மூலம் அவர் வெளிப்படுத்தினார். பரிசுத்தத்தில் அவர் தொடர்ந்திருந்தார். அவர் மாமிசத்துக்குரியவராகி ஆன்மா, உடல், சுற்றுச்சூழல் ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டவராகவில்லை. ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து மூன்று முறை ஜெபித்தார். தமக்கு துரோகம் செய்தவர்களுக்காகவும், தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும் பிதாவிடம் செய்யப்பட்ட பரிந்துரையாக முதல் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சிலுவையில் மிகக் கொடிய சரீர வேதனையை அவர் அனுபவித்தார். இருந்தபோதிலும் தாம் வேதனையினால் ஆளப்படுவதற்கு அவர் உடன்படாதிருந்தார். அவருடைய தேவைக்கும், விருப்பத்திற்கும் உடன்படவில்லை. அவர் பிதாவினிடம் ஜெபித்தார். தம்முடைய கைகால்கள் ஆணிகளால் கடாவப்பட்டு, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேதனைமிகு அந்த நிலையிலும், தம்முடைய எதிரிகளுக்காக அவர் ஜெபித்தார். எத்தனை ஆச்சரியம்! ஆணிகள் துளைக்கப்பட்ட கைகால்கள், தலையிலோ முள்முடி, உடல் முழுவதும் இரத்தக் கால்வாய்கள் இப்படி வேதனையின் உச்சக்கட்டத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்த அந்த வேளையிலும் எப்போதும்போல், ஜெபமே அவர் வாழ்வில் முதன்மை பெற்றிருந்தது. கோரச் சிலுவையில் அறையப்பட்டு கொடிய வேதனையில் தொங்கிக் கொண்டிருந்தபோதும் அவர் ஜெபித்தார். ''எல்லா நேரமும் ஜெப நேரமே'' என்பதை இதன்மூலம் அவர் மெய்ப்பித்துக் காட்டினார்.

நானும், நீங்களும் ஜெபிக்க முடியாத நிலையில் இருந்தோம் என்று சொல்லும் நிலை நமக்கு வராமலிருப்பதாக! ''நான் களைப்படைந்திருக்கின்றேன். எனவே ஜெபிக்கவில்லை'' என்று சொல்லாதிருப்போமாக. நான் மிகவும் நொந்து போயிருக்கிறேன், வருத்தத்திலிருக்கிறேன் ஆகையால் ஜெபிக்க முடியவில்லை'' என்று சொல்லும் நிலை உங்களுக்கும், எனக்கும் வராமலிருப்பதாக! சிலுவையில் ஆண்டவர் மன்றாடியதன் மூலம் மனிதன் ''எக்காலத்திலும், எச்சூழலிலும், என்ன விலை கொடுத்தேனும் மன்றாடியே ஆக வேண்டும்'' என்பதை நிறுவியுள்ளார். ஒவ்வொரு நொடிப்பொழுதும், ஒவ்வொரு நிலையிலும், எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதன் ஜெபிக்க வேண்டும் என்பதே ஆண்டவரின் நோக்கம்.

ஆண்டவருடைய கண்கள் எப்போதும் பிதாவையே நோக்கியிருந்தன. அவருடைய கண்கள் எப்போதும் பிறருடைய தேவைகளையே நோக்கியவண்ணம் இருந்தன. மக்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்பதேயே எப்போதும் அவர் கண்கள் தாகத்துடன் நோக்கியிருந்தன. அவை எப்போதும் அவரை ஜெபத்திற்கு வழிநடத்தின.

ஆண்டவர் இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த கடைசி வார்த்தையும் ஒரு ஜெபமாகவே இருந்தது. சிலுவையில் தொங்கிய அருள்நாதர் முதல் வார்த்தையை ஜெபத்தில் ஆரம்பித்து, கடைசி வார்த்தையை ஜெபத்தில் முடித்தார். அவர் எப்படி ஜெபித்தார்?

பிதாவே, உம்முடைய மேன்மைமிகு குமாரன் தம் வாழ்க்கை முழுவதும் ஜெபித்தார். எங்களுடைய பாவங்களை அவர் சுமந்ததன் காரணமாக உம்மோடு ஏற்பட்ட பிரிவின் மிகக் கடுமையான வேதனையை அவர் உணர்ந்தபோதும் கூட அவர் வேறெங்கும் நோக்காமல் உம்மையே நோக்கி, பிதாவே, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று கேட்டார். ஆண்டவரே, என்னுடைய வாழ்க்கையை, என்னுடைய இருதயத்தை மாற்றி என்னை அவரைப்போலாக்கும். என்னை உம்மிடம் இழுத்துக் கொள்ளும், எனக்குரிய யாவற்றையும் உமக்கு நேராய் திசை திருப்பும். ஆண்டவரே, ஜெபம் பண்ண எங்களுக்குக் கற்பியும். உம்மோடு எங்கள் இருதயங்களை இணைத்தருளும். நீர் இப்படிச் செய்யும்போது நாங்கள் முற்றிலும் வேறுபட்டவர்களாய் உம்மைப்போல் மாறுவோம். ஆண்டவரே நீர் இதனைச் செய்யப்போகிறபடியால் உமக்கு நன்றி. ஆமென்!



HANDLE WITH CARE

# RIGHT FOUNDATION

BUILD ON THE

# உண்மை அன்பு மாயமற்றது / நிலையானது

COUNSELLING PART - விவாகக் களம்

MRS. VASANTHI EMMANUEL

எனக்கு சுதந்திரமே இல்லை... எப்போ பார்த்தாலும் எதிலும் Condition... அங்கு போகாதே... இதைச் செய்யாதே... பேசாதே... பார்க்காதே... இது என்ன வாழ்க்கை! இதுக்கு ஒரே முடிவு இந்த வீட்டை விட்டு எவ்வளவு சீக்கிரமாக வெளியே போகிறோமோ அதுதான் ஒரே வழி. இதுதான் கெட்ட குமாரனின் உவமையின் சாரம். தந்தையின் அரவணைப்பும், வீட்டின் பாதுகாப்பும் வெளியேறும் வரை பெரும் தொல்லையாகத் தான் இருந்தது. இன்றைய இளைஞர்களுக்கும் இதுதான் அப்பட்டமான உண்மை.

சிலிர்ப்பூட்டும் பேச்சு, உணர்ச்சியைத் தூண்டிவிடும் ஒரு பார்வை, அதிரடியாய் ஆழ்மனதை அசைக்கும் செயல் இவைகளில் ஆட்கொள்ளப்படும் எவரும் இதுதான் உண்மையான காதல் என சொந்தம் கொள்ள முடியாது... உணர்ச்சியை மையப்படுத்தும் காதலின் பேராபத்து என்னவென்றால், பார்த்தவுடன் வரும் மோகத்தில் வேகம் இருக்கும். அது அதிதீவிரமாக இருக்கும். கண் சொருகிப்போன நிலையில், சிந்தை முழு தப்புகளுக்கும் தாளம் போடும். அதிலிருந்து வெளிப்படுபவை எல்லாம், நீ இல்லாமல் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது. நீதான் எனக்கு எல்லாம் என்ற இந்த இமாலய வாக்குறுதிதான். இயல்பு வாழ்க்கையில் வரும் தவறானப் புரிதல்கள், எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இயலாமல் ஒருவருக்கொருவர் தவறும் பொழுது, வாழ்வின் கால ஓட்டத்தில் நிலைமை தலைகீழாகும் பொழுது, வாய் முழுவதும் நீதான் எனக்கு எல்லாம் என்றவர்களின் சந்திப்பின் இடைவெளிகள் அதிகமாகலாம், தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்படலாம். சந்திக்கக் காத்திருந்தப் பேருந்து நிறுத்தங்கள் வெறிச்சோடிப் போகும். மோகத்தை மையமாக்கிய உணர்ச்சி சார்ந்தக் காதல் இப்படி தான் நடந்துக் கொள்ளும்.

உண்மையான நேசம் – இதைவிட அது பரவாயில்லையே எனத் தேடாது. கொஞ்ச நாளிலே புளித்துவிட்ட உணர்வைக் கொடுக்காது. எந்த விலைக்கிரயத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயங்காது. உண்மையாய் நேசிப்பவர்களின் பயணம் எந்த நிலையிலும் இணைந்தே பயணிக்கும்.

லூக்கா 15ஆம் அதிகாரத்தில் தந்தையை விட்ட மகனுக்காக தகப்பன் புதிய மகனைத் தேடவில்லை. அவனுடைய இடத்திற்கு மற்றொருவனைச் சேர்த்துக் கொள்ளவில்லை. அமைதியை வெளிப்படுத்தினார். அவர் அவன் காட்டிய செயல்களிலோ, வார்த்தைகளிலோ, மோகச் செயல்களிலோ ஈர்க்கப்படாமல், அவன் மேலுள்ள ஆழமான உறவை மையமாக்கியிருந்தார். இந்த அன்பு தான் கடவுள் நமக்குக் காட்டும் உண்மையான அன்பு. கிறிஸ்தவத் திருமணங்கள் ஆங்காங்கே பறந்து திரியும் வண்ணத்துப்பூச்சிகளைப் போன்றது கிடையாது.

அது ஆழமானக் கிறிஸ்தவ உடன்படிக்கையை மையமாக்கிய ஒன்று.

உடல் சார்ந்த ஈர்ப்பு ⟶ இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும் என சுயத்தை மையப்படுத்தி எதிர்பார்க்கிறது.

உண்மையானக் காதல் சார்ந்த அர்ப்பணிப்பு ⟶ இதற்கு நான் என்ன ஈடு செய்ய முடியும் என துடிக்கிறது. இது கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது.

ஊதாரி மகனின் உவமையில் அவன் அனைத்தையும் இழந்துவிட்ட போதிலும், தகப்பனின் அன்பு அது மாயமற்றதாக இருந்தது. அதுபோல தான் கிறிஸ்துவின் அன்பும். உங்கள் மேல் உண்மையாய் அன்பை வெளிப்படுத்துபவர்கள் உடல் சார்ந்தத் தேவையை மையப்படுத்தி நேசிக்க மாட்டார்கள். சிரமப்படும்பொழுது மறைந்து விடமாட்டார்கள்.

என் இனிய கிறிஸ்தவ இளைஞர்களே! ஒரு உறவைத் தேடும் முன் உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

- நான் என்னை முக்கியப்படுத்தி, என்னை மற்றவர்கள் கவனிக்கும் அளவிற்கு ஈர்ப்பை வெளிப்படுத்தும் நபரா?
- அல்லது தேவ சித்தத்தை மையப்படுத்திய அர்ப்பணிப்பிற்கு ஆயத்தமான நபரா?
- கர்த்தரின் வழி நடத்தல்கள் என் தெரிந்தெடுப்புக்கு எதிர்மறையாக இருக்குமாயின், நான் முழுவதும் அவர் சித்தத்திற்கு இணக்கம் கொடுக்கும் நபராக முடியுமா?
- இவை தவிர்த்து எனக்கும் ஒரு தொடர்பு (Boy Friend / Girl Friend) கண்டிப்பாக வேண்டும் என உசுப்பேற்றும் உலகம் தான் என் தேர்ந்தெடுப்பா?

தனித்து இருப்பது கோழைத்தனம் என சவால் விடும் இளைஞர்களின் பேச்சில் சிக்கி சின்னாபின்னமாவதை விட, உண்மையாய் உன் வாழ்வை அலங்கரிக்கும் ஆண்டவரின் சத்தம் நிலையானது, உண்மையானது, நிறைவானது.

எது உங்கள் தெரிந்தெடுப்பு?

கிளர்ச்சியைத் தூண்டும் மோக அன்பா? கெட்டக் குமாரன் இதைதான் தெரிந்தெடுத்து, அலைக்கழிக்கப்பட்டான். தந்தையின் அன்போ, நிதானமாய், ஆழமாய், நிலையாய் உன்னை அலங்கரிக்கும் அன்பு. அது எப்பொழுதும் நிறைவையும், ஆனந்த வாழ்வையும் உனக்குக் கொடுக்கும்.

**தெரிந்தெடுப்பு உன் கையில்...**

**உண்மையாய் உன் வாழ்வை அலங்கரிக்கும் ஆண்டவரின் சத்தம்
நிலையானது, உண்மையானது, நிறைவானது.**

# விலையேறப்பெற்ற முத்து

REV. K. KINGSLEY JOHN

4th WEEK MESSAGE - GOSPEL - ராஜ்ய களம்

### அறிமுகம்:

இயேசு கிறிஸ்து சொன்ன உவமைகளில் "மிக மதிப்புமிக்க முத்து" என்ற உவமை சிறியதாக இருந்தாலும், அதில் அடங்கியுள்ள செய்தி மிக ஆழமானதாகும். இந்த உவமை மத்தேயு 13:45-46இல் காணப்படுகிறது. தேவராஜ்யத்தின் மதிப்பு, மனிதன் செய்ய வேண்டிய தியாகம், சரியான புரிதல் மற்றும் முழுமையான அர்ப்பணிப்பு ஆகியவற்றை இந்த உவமை தெளிவாக எடுத்துரைக்கிறது. "மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத்தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக்கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" (மத்தேயு 13:45, 46).

### வரலாற்று பின்னணி:

மத்தேயு 13ஆம் அதிகாரம் முழுவதும் விதை, வயல், களைகள், புதைந்த பொக்கிஷம், முத்து போன்ற அன்றாட வாழ்க்கையின் எடுத்துக்காட்டுகள் மூலம் இயேசு தேவ ராஜ்யத்தின் உண்மையை விளக்குகிறார். பண்டையக் காலங்களில் முத்துக்கள் மிகவும் அரிதானதும், மிக உயர்ந்த மதிப்புடையதுமாக இருந்தன. முத்து வியாபாரிகள் தரமான முத்துகளை அடையாளம் காணும் திறன் பெற்றவர்கள். எனவே, இந்த உவமையில் வரும் வியாபாரியை அறிவும், அனுபவமும் கொண்ட மனிதனாகக் குறிப்பிடுகிறார்.

### உவமையின் மையப் பொருள்:

இந்த உவமையின் மையக் கருத்து மிக உயர்ந்த மதிப்பு ஆகும். வியாபாரி பல முத்துகளைத் தேடுகிறான்; ஆனால் அவற்றில் அனைத்தையும் விட உயர்ந்த மதிப்புள்ள ஒரே ஒரு முத்தைக் கண்டதும், அவன் தன்னிடமிருந்த அனைத்தையும் விற்று அதை வாங்குகிறான். இந்த முத்து தேவராஜ்யத்தைக் குறிக்கிறது. தேவராஜ்யம் என்பது எதிர்கால நம்பிக்கை மட்டுமல்ல; அது இன்றைய மனித வாழ்க்கையில் வெளிப்படும் தேவனுடைய ஆட்சியாகும். தேவ ராஜ்யத்தின் உண்மையான மதிப்பை உணருகிற மனிதனுக்கு மற்ற அனைத்தும் இரண்டாம் நிலையாகிவிடுகின்றன.

> **மிக மதிப்புமிக்க முத்து என்ற உவமை, தேவராஜ்யத்தின் ஒப்பற்ற மதிப்பையும், அதற்காக முழுமையான அர்ப்பணிப்பு தேவை என்பதையும் நமக்கு வலியுறுத்துகிறது.**

### 1. தியாகமும், சீஷத்துவமும்:

இந்த உவமையின் முக்கியக் கருத்து தியாகம் ஆகும். வியாபாரி அனைத்தையும் இழந்துவிட்டான் என்று சொல்ல முடியாது; மாறாக, அவன் மிக உயர்ந்த ஒன்றைப் பெற்றான். இந்த தியாகம் கட்டாயமல்ல, மனப்பூர்வமானது.

இது இயேசுவின் சீஷத்துவப் போதனையுடன் ஒத்துப்போகிறது: "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:27).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சில நேரங்களில் செல்வம், பதவி, சுயநலம் போன்றவற்றை விட்டுக்கொடுப்பதை உள்ளடக்கியதாகும். தேவ ராஜ்யமே வாழ்க்கையின் முதன்மையாக வேண்டும் என்பதே இந்த உவமையின் அழைப்பு.

### 2. அறிவும் சரியான பதிலும்:

இந்த உவமையில் வியாபாரி தேடி வந்தவன் என்பது கவனிக்கத்தக்கது. இது ஆன்மீகத் தேடலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. தேவ ராஜ்யம் அலட்சியமானவர்களுக்கு அல்ல, உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு வெளிப்படுகிறது. "தேடுங்கள்; கண்டடைவீர்கள்" (மத்தேயு 7:7)

தேவ ராஜ்யத்தின் மதிப்பை உணர்ந்தப் பின்பு, மனிதன் தெளிவான முடிவை எடுக்க வேண்டும். அரைகுறை மனப்பான்மையோ, தாமதமானக் கீழ்ப்படிதலோ போதுமானதல்ல.

### இன்றைய காலச் செய்தி:

இன்றைய உலகில் பணம், அதிகாரம், புகழ் ஆகியவை வாழ்க்கையின் இலக்காகக் கருதப்படுகின்றன. இந்த உவமை நம்மைச் சிந்திக்க வைக்கிறது:

- என் வாழ்க்கையில் மிக மதிப்புமிக்கது எது?
- தேவ ராஜ்யத்திற்காக என் முன்னுரிமைகளை மாற்ற நான் தயாரா?
- என் செயல்கள் என் விசுவாசத்தைப் பிரதிபலிக்கிறதா?
- கிறிஸ்தவ விசுவாசம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியாக அல்ல, மையமாக இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை நினைவூட்டுகிறது.

### முடிவுரை:

மிக மதிப்புமிக்க முத்து என்ற உவமை, தேவராஜ்யத்தின் ஒப்பற்ற மதிப்பையும், அதற்காக முழுமையான அர்ப்பணிப்பு தேவை என்பதையும் நமக்கு வலியுறுத்துகிறது. இயேசு இந்த உவமையின் மூலம், தேவனுடைய ஆட்சியை உணர்ந்து அதை வாழ்க்கையின் முதன்மையாகக் கொள்ள அழைக்கிறார்.

கிறிஸ்துவில் நாம் பெறுவது, நாம் விட்டுக்கொடுப்பதைவிட எப்போதும் மேலானது. உண்மையில், அந்த முத்து அதன் விலைக்குத் தகுதியானதே என்பதை உணர்ந்தவர்களாய் நம்மை ஆண்டவருக்கு அர்ப்பணித்து, கிறிஸ்துவின் ஆட்சிக்கென்று அவரோடு இணைந்து செயல்படுவோம்! கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!



# கனம் பொருந்திய ஸ்திரீ..!

வார்த்தைக் களம்

REV. ALBERT PRABHAKARAN

கர்த்தரின் பார்வையில் கனம் பெற்ற ஸ்திரீ,
கடைநிலை வறியவர்கட்கு உதவிடும் கருணையாள்,
இசக்காரின் இரட்டை ஓய்விடத்தின் குணவதி,
சுற்றம் சூழ சுகித்திருந்த 'சூனமித்தியாள்'
மண்ணின் பெருமையும் மாநேசரின் கிருபையும்
ஒருங்கே பெற்ற உயர்குல உத்தமி!

விருந்தோம்பலுக்கு விலைப்பட்டை நோக்காதவள்,
வருந்தி அழைத்து விருந்து படைத்தவள்,
ஊர் வழிச் செல்லும் உண்மை ஊழியர்கட்கு உயர்த்தொண்டுச் செய்தவள்,
கொடுப்பதிலே கோபுரமானவள்,
கோமகன் அடியவர்கட்கு கொடுத்து மனம் நிறைந்தவள்,
கொண்ட மணாளன் குணம் அறிந்து நடந்தவள்,
கீழே வேர் பற்றி மேலே கனி கொடுத்தவள். (ஏசா 37:31)

பகுத்தறியும் ஞானம் பரமன் கொடுத்த பரிசானது,
பரிசுத்த அடியவரை இனம் காண்பதும்,
தேவையறிந்து திருப்பணி செய்வதும்,
முதற்கண் கொள்கையானது - அது
மூத்தோர் வகுத்த குலப்பெருமையானது,
சுயநலமில்லா சுத்த மனம்,
பிரதிபலன் நோக்கா ஈகைக் குணம்,
பிறப்புக்கும் பெருமை சேர்த்தது - அது
குலத் தளிர்ப்புக்கும் வாசல் திறந்தது.

சோதனையும் வேதனையும் புயலாய் உள்ளம் புகுந்தாலும்
புயல் நடுவின் அமைதியை அகத்தே கொண்டவள்,
உறைவிடுத்த கூர்வாள் உள்ளம் கிழித்தாலும்
'சுகந்தான்' என்ற நேர்மறைச் சொல்லை வழிமொழிந்தவள்.
மலைகள் விலகினாலும் பர்வதங்கள் இடம் பெயர்ந்தாலும்
பாதை மாறாதவள் - பரமனிடம் கொண்ட பற்றை விலக்காதவள்,
தோற்றது மரணம் - வென்றது மாசற்றவள் விசுவாசம்.

சிந்தை மகிழ்ந்து செய்யும் சிறு செயலுக்கும்
சீர்மிகு ஆசீர்வாதம் பெருக்கெடுத்து இல்லம் வரும் - அது
சீர் இயேசு நாதருக்கே மகிமை சேர்க்கும்.



# இயேசு கிறிஸ்துவின் சீஷன் யாக்கோபு

– ஒருநீக் களம் REV. PRABAKARA SARATHY

**முன்னுரை:**

இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீடர்களில் யாக்கோபு மிக முக்கியமானவரும், இயேசுவுக்கு மிக நெருக்கமானவருமாவார். இவரது பெற்றோர் செபெதேயு, சலோமி மற்றும் சகோதரர் யோவான். யாக்கோபையும் யோவானையும் இயேசு "பொவனெர்கேஸ்" (Boanerges) என்று அழைத்ததாக வேதம் பதிவு செய்கிறது. இதற்கு "இடிமுழக்க மக்கள்" (Sons of Thunder) என்று பொருள். கலிலேயாவைச் சேர்ந்த இவர்கள் மீனவர்களாவர்.

**யாக்கோபின் அழைப்பு:**

யாக்கோபு ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்தார். சலோமி இயேசுவின் தாயான மரியாளின் சகோதரியானதால், யாக்கோபு இயேசுவின் உறவினராவார். கலிலேயா கடற்கரையில் யாக்கோபு தன் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தபோது இயேசு அவரை அழைத்தார் [மத்தேயு 4:21]. இயேசுவின் முதல் சீடர்களில் ஒருவர் யாக்கோபு ஆவார்.

**யாக்கோபின் பண்புகள்**

கடவுள் மீதும் அவரது பணியின் மீதும் மிகுந்த வைராக்கியம் கொண்ட யாக்கோபு பன்னிரண்டு சீடர்களில் ஒருவராகவும், மறுரூப மலையில் இயேசுவுடன் இருந்த முக்கியமான மூன்று சீடர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். தன்னைப் பின்பற்றுமாறு இயேசு அழைத்தபோது, தேவனுடைய இராஜ்யத்திற்காகத் துரிதக் கீழ்ப்படிதலோடு எல்லாவற்றையும் விட்டு நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்காக இயேசுவின் தலைமையை ஏற்றுக்கொண்டார். மீன்பிடித் தொழிலில் அந்திரேயா மற்றும் பேதுருவுடன் கூட்டாளியாக இருந்த யாக்கோபுவுக்கு, இயேசுவின் அழைப்பு அவரைத் தன் தொழில் மற்றும் வலையை ஒதுக்கி வைக்கச்செய்தது. மலையில் இயேசு மோசேயுடனும், எலியாவுடனும் பேசுவதைக் கண்டதன் மூலம், இயேசுவின் மேசியாத்துவத்திற்கு ஒரு வலுவான சாட்சியாகத் திகழ்ந்தார். மீனவராக இருந்த யாக்கோபு, "என்னைப் பின்பற்று" என்ற கர்த்தரின் குரலைக் கேட்டு மனிதரைப் பிடிப்பவராக மாறினார்.

**யாக்கோபின் போற்றத்தக்க வாழ்க்கை முறை**

அழைப்பிற்குப் பிறகு, யாக்கோபின் வாழ்க்கை மீனவர் என்ற நிலையிலிருந்து சீடர் என்ற நிலைக்கு மாறியது. எருசலேமிலுள்ள யூத கிறிஸ்தவர்களுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் யாக்கோபு தலைவரானார் [அப். 15:13]. யாக்கோபு நிருபத்தின் ஆசிரியர் இவரே. தேவாலயத்தின் அழிவு மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகையின் அடையாளங்கள் குறித்து, யோவான், பேதுரு மற்றும் அந்திரேயாவுடன் இணைந்து இயேசுவிடம் கேட்குமளவிற்கு யாக்கோபு தைரியமானவராக இருந்தார்.

**யாக்கோபின் சாதாரண மனிதத் தன்மை**

இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, சில சீடர்கள் விரக்தி, பயம் மற்றும் வாழ்க்கை முறை மாற்றம் இவைகளினால் தங்கள் தொழிலான மீன்பிடித் தொழிலுக்கு மாறியபோது, யாக்கோபும் அவர்களுடன் இணைந்தார்.



இருப்பினும், யோவான் மற்றும் பேதுருவுடன் கடற்கரையில் உயிர்த்தெழுந்த இயேசுவை யாக்கோபு கண்டார். "இடிமுழக்க மகன்" என்றழைக்கப்பட்ட யாக்கோபு சாதாரண மனிதராகக் காணப்பட்டார். சூழ்நிலைகள் ஆதரிக்காதபோது, அசாதாரணமானவர்களும் சாதாரண மனிதர்களாகிவிடுவது இயல்பு.

**யாக்கோபின் இறுதிக்கால நிகழ்வுகள்**

இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பிறகு யாக்கோபும் துன்புறுத்தல்களுக்கு ஆளானார். எருசலேமில் அவர் "திருச்சபை தலைவராக" இருந்தபோது (அப். 12:2) துன்புறுத்தலை அனுபவித்து, ஏரோது ராஜாவால் கைது செய்யப்பட்டார். கி.பி 44இல் ஏரோது அகிரிப்பாவால் யாக்கோபு தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்த (Martyred) முதல் அப்போஸ்தலன் இவரே. இவரது உடல் ஸ்பெயினின் தன்னாட்சிப் பகுதியான கலீசியாவில் உள்ள சாண்டியாகோ டி கம்போஸ்டெல்லா பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**FMPBக்கான இயேசு கிறிஸ்துவின் அழைப்பும், கட்டளையும்:**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB) ஊழியங்களில் இணைய, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "யாக்கோபு போன்ற ஆளுமைகளை" எதிர்பார்க்கிறார். நீங்களும் இயேசுவின் மெல்லிய குரலைக் கேட்டு, அவரைப் பின்பற்ற வாருங்கள். FMPBஇன் மூலம் உங்களது சுவிசேஷப்பணியைச் செய்ய எங்களுடன் இணையுங்கள். நீங்கள் கலாச்சாரம் கடந்த மிஷனெரியாக, பள்ளியில் ஆசிரியராக, மருத்துவப் பணியாளராக, வேதாகம மொழிபெயர்ப்பாளராக அல்லது பகுதி நேரப் பணியாளராக (Mission Associate) FMPBஇல் எங்களுடன் இணைய வாருங்கள்!

**முடிவுரை:**

**தேவனுடைய பணியில் யாக்கோபு ஓர் உயிருள்ள சாட்சி. வாலிபனே, இது உங்களுக்கு விடுக்கப்படும் நேரடி அழைப்பு. சாக்குப்போக்கு சொல்லாமல் அவரது அழைப்புக்கு நீங்கள் பதிலளிப்பீர்களா? அவரது இரண்டாம் வருகை மிக நெருங்கிக் கொண்டிருக்கிறது. வெறுங்கையாய் அவர் முன் நிற்கப்போகிறாயா? உன் பதில் என்ன?**

Friends Missionary Prayer Band
Youth Wing Presents

# LEAD TRAINING '26

"I have called you by name,
You are mine" - Isaiah 43:1

Exclusive for volunteers & Counsellors

March 7-8
Sat 9 AM - Sun 1 PM

Iraivanin Thootam
Poondi, Thiruvallur

**Speakers**

**Mr.Valentine Davidar**
**Rev.Emmanuel Ranjithsingh**



**9445040148**
**9486147408**

---

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
**நடத்தும்**

# தமிழ் மாநில முகாம் 2026

நாள்: **மே**
**21 முதல் 24 வரை**
வியாழன் முதல் ஞாயிறு வரை

இடம்:
**பெத்தேல் வளாகம்,**
**டேனிஷ்பேட்டை, சேலம்**

தமிழ் மாநில அளவிலான வாலிபர் வேதாகம தேர்வு
(இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்களுக்கானது)

## BIBLE AND MISSIONARY BIOGRAPHY EXAM - 2026



**SYLLABUS:**

- ஏசாயா 40ஆம் அதிகாரம் முதல் 66ஆம் அதிகாரம் வரை
- 2026 மார்ச் ஏப்ரல் மே மாத கேரீத் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ள மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு மற்றும் செய்திகள்
- மனப்பாட வேத பகுதி - ஏசாயா 53:1-12
- ஆங்கில வேதாகமம் பயன்படுத்துவோர் NKJV

**INSTRUCTIONS:**

- தேர்வு மாநில முகாமில் வைத்து நடைபெறும்
- தேர்வில் முதன்மை பெறும் முதல் 3 நபருக்கு சிறப்பு பரிசுகள் உண்டு
- தேர்வில் கலந்துக்கொள்ளும் அனைவருக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும்
- வயது வரம்பு 13-30 வயது வரை

**தொடர்புக்கு: 94450 40148 / 94447 55896**